பு. (வா-ன்) எ-இ-ள். பிறவும்-பிறர்பொருள்களையும், தமபோல-தம்முடையபொருள்களைப்போல, பேணிச்செயின்-

பாதுகாத்துச்செய்வாரானால், வாணிகஞ்செய்வார்க்குவாணிகம்-வியாபாரஞ்செய்வார்க்குவியாபாரம்மிகவும்நன்றாம், எ-று.

வி. சொல்லெச்சமாகவாணிகம் என்பதற்குப் பயனிலை குறைந்துநின்றது. பிறவுந்தமபோற்பேணிச்செய்தலாவது, கொள்வதில் அதிகமும், கொடுப்பதிற்குறைவுமாகாமல், நடுவுநிலைமைக்கொத்திருக்கச்செய்வது. இப்படிச்செய்வார்க்கு அந்தவாணிகம் வளர அறுக்கக்கூடாத நல்லாக்கமுடையதென்பார், வாணிகஞ்செய்வார்க்கு வாணிகமெனப்பயனிலைகொடாதொழிந்தார். இந்தநடுவுநிலைமை இவர்க்குமிகவுஞ்சிறந்ததென்பார், இப்பாட்டை அதிகாரமுடிவிலேவைத்தார். இதினாலே, வாணிகர் ஆக்கஞ்சொல்லப்பட்டது.

௰௩. அதிகாரம்.

அடக்கமுடைமை.

ப-ரை. அடக்கமுடைமை- அஃதாவது மெய்மொழிமனங்கள் நெறிக்கட் செல்லாதடங்குதலுடையனாதல்-அஃதேதிலார்குற்றம்போற்றங்குற்றங்காணு நடுவுநிலைமையாளர்க்காகலின் நடுவுநிலைமையின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (அட-மை) அதாவது, மனவாக்குக்காயங்கள்பாவவழியிலே செல்லாமல் அடங்குவதுடையனாவதைச்சொல்வது. இது நடுவுநிலைமையென்கின்றநீதிநெறியாளனுக்கே உரியதாகலின், நடுவுநிலைமையின்பின்வைக்கப்பட்டது.

௱உக. அடக்கமமரருளுய்க்குமடங்காமை
யாரிருளுய்த்துவிடும்.

ப. இ-து-ஒருவனையடக்கமாகியவறம்பின்றேவருலகத்துய்க்கும் அடங்காமையாகியபாவந்தங்குதற்கரியவிருளின்கணுய்க்குஞ்செலுத்துமென்றவாறு.

வி. இருளென்பதோர்நரகவிசேடம் -- எல்லாம்பொருளிற்பிறந்துவிடுமென்பதுபோலவுய்த்துவிடுமென்பதொருசொல்லாயநின்றது.

பு. (அட-ம்) எ-இ-ள். அடக்கமமரருளுய்க்கும்-அடக்கமுடைமையாகியதருமமானது (தன்னைச்செய்தவனைப்பின்பு) தேவருள் ஒருவனாகச்செலுத்தும், அடங்காமையாரிருளுய்த்

துவிடும்-அடங்காமையாகியபாவமானது அரியநரகத்திலேசெ லுத்திவிடும், எ-று.

வி. பாவபுண்ணியங்களிரண்டும் ஒருவர்க்கு இம்மையிலேசெயப்படுபொருளாகியகருமங்களாகநிற்குமாயினும்,மறுமையிலே அவற்றைச்செய்தவனைச்செயப்படுபொருளாக்கித் தாம்வினைமுதலாகியகருத்தாவாமென்றுசொல்லவந்தவர்,உய்க்கும் என்றும், உய்த்துவிடுமென்றுஞ், சொன்னார். உய்த்துவிடும் என்பது, பிறந்துவிடும், நின்றுவிடும், என்பவைபோல, ஒருசொல். உய்த்துப்பின்கழியும் எனினும், அமையும். இருள், நரகம். அருமையிருள், ஆரிருளெனவிகாரப்பட்டுநின்றது.

௱௨௨. காக்கபொருளாவடக்கத்தையாக்க மதனினூஉங்கில்லையுயிர்க்கு.

ப. எது-உயிர்க்கு அடக்கத்தின் மிக்க செல்வமில்லையாகலான் அவ்வடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு அழியாமற்காக்க வென்றவாறு.

வி. உயிரென்பது-சாதியொருமை அஃறிணைமுகத்து உயிரோடு மேனின்ற நரிந்தடங்கிப்பயன்கொள்வது துவேயாகலின்.

பு. (கா-கு) எ-இ-ள். உயிர்க்கு-உயிர்களுக்கு, அதனினூங்காக்கமில்லை-அந்த அடக்கத்தின்மிக்கசெல்வமில்லை, (ஆதலாலே) காக்கபொருளாவடக்கத்தை-அடக்கத்தை(உறுதிப்) பொருளாகக்கொண்டு (அழியாமலே) காக்கக்கடவது, எ-று.

வி. உயிர் என்றது, சாதி ஒருமை. அறிந்து அடங்கி அந்தப்பலனைக்கொள்வது அதுவாதலால், இங்கே உயிர் என்றது, மக்கள் உயிரையேகுறித்துநின்றது.

௱௨௩. செறிவறிந்துசீர்மைபயக்குமறிவறிந் தாற்றினடங்கப்பெறின்.

ப. எது-அடங்குதலே நமக்கறிவாவதென்றறிந்து நெறியானேயொருவனடங்கப்பெறின் அவ்வடக்கம் நல்லோரானறியப்பட்டு அவனுக்குவிழுப்பத்தைக் கொடுக்குமென்றவாறு.

வி. இல்வாழ்வானுக்கடங்குநெறியாவது மெய்முதலியமூன்றுந் தன்வயத்தவாதல.

பு. (செறி-ன்) எ-இ-ள். அறிவறிந்து-(அடங்குவதே நமக்கு) ஞானமாவதென்று அறிந்து, ஆற்றின்-நெறியினாலே,

அடங்கப்பெறின்-(ஒருவன்) அடங்கப்பெறுவானானால், செறிவு-(அந்த) அடக்கமானது, அறிந்து-(நல்லோர்களாலே) அறியப்பட்டு, சீர்மைபயக்கும் - (அவனுக்கு) சிறப்பைத்தரும், எ-று.

வி. கிரகத்தனுக்கு அடங்குநெறியாவது, மனவாக்குக் காயங்கள்தன்வசப்படுவது. இனிஇக்குறளுக்குவேறோர்முடிபு.

அறிவறிந்து-அறிவினாலே (தனக்கு அறியவேண்டியவற்றை)அறிந்து, ஆற்றின்-(அந்தஅறிந்த) நெறிக்குத்தக, அடங்கப்பெறின் - (மனமொழிமெய்கள்) அடங்கப்பெறுவானானால், செறிவு-அந்தஅடக்கம், அறிந்து-(உயர்ந்தோரால்) அறியப்பட்டு, சீர்மைபயக்கும்-செல்வமுடைமையைத்தரும், எ-று.

இதற்கு, வி. ஆற்றின் என்றஇடத்தில்இன், சாரியையெனக்கொண்டு, கு உருபும், அதன்தகவுப்பொருளுங்,குறைந்துநின்றதெனக்கொள்க. சுட்டுக்கள்,வருவித்துரைக்கப்பட்டன.

௱௨௪. நிலையிற்றிரியாதடங்கியான்றோற்றம்
மலையினுமாணப்பெரிது.

ப. எது-இலவாழககையாகியதனனெறியினவேறுபடாதுநினறடஙகினவனதுயாசசிமலையினுமிகபபெரிதெனறவாறு.

வி. திரியாதடஙகுதல-பொறிகளாறபுலனகளைநுகராதினறேயடஙகுதல-மலையாகுபெயா.

பு. (நிலை-து) எ-இ-ள். நிலையிற்றிரியாது-(தனக்குரிய இல்வாழ்க்கை) நிலையிலேநின்றுமாறுபடாமல், அடங்கியான்றோற்றம்-அடங்கினவனுடையஉயர்ச்சி, மலையினுமாணப்பெரிது-மலையின் உயர்ச்சியினுமிகப்பெரிதாம், எ-று.

வி. திரியாதடங்குதல், இந்திரியங்களால்நல்விடையங்களாகிய அநுபவங்களை அநுபவித்தேமனமொழிமெய்கள்அடங்குவது. மலை, பொருளாகுபெயர்.

௱௨௫. எல்லார்க்குநன்றாம்பணிதலவருள்ளுஞ்
செல்வர்க்கேசெல்வந்தகைத்து.

ப. எது-பெருமிதமினறியடஙகுதலெலலாாககுமொபபநனறேயெனினுமவவெலலாருளளுஞசெலவமுடையாாககேவேறொருசெலவமாஞசிறபபினையுடைததெனறவாறு.

வி. பெருமிதததினைச செயயுங கலவியுங குடிபபிறபபுமுடையார அஃதின்றியவைதமமானே யடஙகியவழிச சிறநது காட்டுமாகலிற செலவாககே செலவந தகைததெனறார-செலவததகைததெனறது மெலிநது நினறது-பொதுவெனபாரையுமுடனபட்டுச சிறபபாதல கூறியவாறு - இவையைநதுபாட்டானும பெருமவகையானடககததுச சிறபபுக கூறபபட்டது.

பு. (எல்-து) எ-இ-ள். எல்லார்க்குநன்றாம்பணிதல்-(கருவியாமல்) அடங்குகிறது எல்லார்க்கும் (பொதுப்பட) நன்மையாம், (ஆயினும்) அவருள்ளும்-அந்த எல்லாருள்ளும், செல்வர்க்கேசெல்வந்தகைத்து-செல்வமுடையவர்க்கே (அந்த அடக்கம்மேலுமொரு) செல்வச்சிறப்பினையுடையதாம், எ-று.

வி. கருவத்தையுண்டாக்குகின்றகல்வியும், உயர்குடிப்பிறப்பும், பொருளும், வீரமும், முதலாயின உடையவர், அந்தக்கருவமில்லாமலே, அவைதம்மாலே அடங்கினபோது, மேன்மேலுஞ்சிறந்துகாட்டும், ஆதலால் சிறப்பினுள்ளும், பொதுப்படச்செல்வர்க்கே செல்வந்தகைத்தென்றார். செல்வத்தகைத்தென்பது, செல்வந்தகைத்து என்று, மெலித்தல்விகாரமாய்நின்றது. எல்லார்க்குமெனப்பொதுவாக உடன்பட்டுச்செல்வர்க்கே எனச்சிறப்பாகச்சொல்லியபடி. இவையைந்து பாட்டாலும், அடக்கமுடைமையின்சிறப்புச்சொல்லப்பட்டது.

௱௨௬. ஒருமையுளாமைபோலைந்தடக்கலாற்றி
னெழுமையுமேமாப்புடைத்து.

ப. எது-ஆமைபோலொருவனொருபிறபபினகணைமபொறிகளையுமடககவலலனாயினவவனமையவனுககெழுபிறபபினகணணுமாருநிலையுடைததெனறவாறு.

வி. ஆமையைநதுறுபபினையுமிடாபுகுதாமலடககுமாறுபோலவிவனுமைமபொறிகளையுமபாவமபுகாமலடககவேணடுமெனபார ஆமைபோலெனறார- ஒருமைககடசெயதவினையினபயனெழுமைதோறுநதொடருமெனபதிதனானறிக-இதனானமெயயடககங கூறபபட்டது.

பு. (ஒரு-து) எ-இ-ள். ஒருமையுள்-ஒருபிறப்பிலே, ஆமைபோல-ஆமை (ஐந்து உறுப்புக்களையும்விக்கினம்வாராமல் அடக்குவது) போல, ஐந்தடக்கலாற்றின்-(ஒருவன்) ஐம்புலன்களையும் (பாவம்வாராமல்) அடக்கவல்லவனானால், (அந்தவல்லமை அவனுக்கு) எழுமையுமேமாப்புடைத்து-எழுவகைப்பிறப்பிலும் இன்பமுடைத்தாம், எ-று.

வி. விக்கினம்வாராமல் என்பது, உபமானத்திலே இசையெச்சமாகக்குறைந்துநின்றதினாலே, உபமேயத்திலும்பாவம் வாராமலென்பதுவருவிக்கப்பட்டது. பொறிபுலன்களிரண்டுங்காரணகாரியமாதலால், இரண்டையும் அடக்கவேண்டுமென்பார், பொதுப்பட ஐந்தடக்கலாற்றின் என்றார். ஆமை ஐந்துறுப்புகளையும்விக்கினம்வாராமல் அடக்குதல்போலப் புலன்களைப்பாவம்வாராமல் அடக்கினாலின்பமாமென்பதற்கு, உ-ம்.

ஆமையொன் றுறுப்போரைந் துந்தன் னுளேயடக்குமாபோற்,
றீமைசெய்புலன்களைந் துந்தன் னுள்ளேசெறியச்சேர்த்தின்,
வாய்மையுண் ணிகழுமென்னை வழுத்தவும்படநின்றானேற்,
றூய்மைசெய்தவர்களுளுஞ் சொல்லுவதவன்றன்சொல்லே,

எனக்காண்க. ஒருவன்ஒருபிறப்பிலேசெய்தவினைப்பயன் எழுவகைப்பட்டசன்மந்தோறுந்தொடருமென்பதுகருத்து. இதினாலே, சரீர அடக்கஞ்சொல்லப்பட்டது.

௱௨௭. யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு.

ப. எது -தமமாறகாககபபடுவனவெலலாவறறையுஙகாககமாடடாரா யினுநாவொனறனையுஙகாககவதனைககாவாராயிறசொறகுறறததினகடபடடு ததாமேதுனபுறுவரெனறவாறு.

வி. யாவெனபதஃறிணைபபனமைவினாபபெயர் அஃதீணடெஞசாமை யுணரநினறது-முறறுமமைவிகாரததாறறொககது-சொறகுறறஞசொலலினக டடோனறுஙகுறறம-அலலாபபாசெமமாபபரெனபனபோல சசோகாபபரெ னபதொருசொல.

பு. (யா-டு) எ-இ-ள். யாகாவாராயினும்-(தம்மாலேகாக்கவேண்டிய) எல்லாவற்றையுங்காக்கமாட்டாராயினும், நாகாக்க-நாவு ஒன்றையுங்காக்க, காவாக்கால்-(அதைக்) காக்காவிட்டால், சொல்லிழுக்குப்பட்டு-சொற்குற்றத்தில் அகப்பட்டு, சோகாப்பர்-துன்பப்படுவார், எ-று.

வி. யா என்பது அஃறிணைப்பன்மைவினாப்பெயர்; அது இங்கே, ஒன்றுங்குறையாமை என்பதுபட, உம்மைகுறைந்துநின்றது. செம்மை, ஏமம், என்னும்பண்புப்பெயர், செம்

மையாதல், ஏமமாதல், என்னும்பொருட்டாய்த்தொழிற்பெயராங்கால், செம்மாப்பு, ஏமாப்பு, எனநிற்பதுபோலச், சோகம், என்னும்பண்புப்பெயர்தொழிற்பெயராங்கால், சோகாப்பு, எனநிற்கும். இவை ஏவல்வினையாங்கால், செம்மா, ஏமா, சோகா, எனநிற்கும். இவ்வாறே, முக்காலமுற்றுவினைகளின் பகுதியாய்நின்று,செம்மாந்தார்,ஏமாந்தார், சோகாத்தார்,செம்மாக்கின்றார்,ஏமாக்கின்றார்,சோகாக்கின்றார்,செம்மாப்பார், ஏமாப்பார், சோகாப்பார், எனவரும். இவற்றுடன்,அர்விகுதி எதிர்காலத்திற்கேயுரித்தாய்ச், செம்மாப்பர், ஏமாப்பர், சோகாப்பர், எனவரும். செம்மை, நேர்மை. ஏமம், இன்பம். சோகம், துன்பம். எனக்காண்க.

௱உ௮. ஒன்றானுந்தீச்சொற்பொருட்பயனுண்டாயி
னன்றாகாதாகிவிடும்.

ப. எ-து-தீயவாகியசொற்களின்பொருளாற் பிறர்க்குவருந்துன்பமொன்றாயினுமொருவன்பக்கலுண்டாவதாயினவனுக்குப் பிறவறங்களாலுண்டான நன்மைதீயவாய்விடுமென்றவாறு.

வி. தீயசொல்லாவன-தீங்குபயக்கும்பொய்குறளைகடுஞ்சொல்லென்பன - ஒருவனல்லவாகச்சொல்லுஞ்சொற்களின்கண்ணேயொன்றாயினுந்தீச்சொற்படுபொருளின்பயன்பிறர்க்குண்டாவதாயினென்றுரைப்பாருமுளர்.

பு. (ஒன்-ம்) எ-இ-ள். ஒன்றானும்-ஒன்றாயினும், தீச்சொற்பொருட்பயன்-தீயசொல்லின் பொருளால்வரும்பயன் (ஆகிய துன்பம்,) உண்டாயின-(ஒருவனிடத்து)உண்டானால், நன்று-(அவனுக்குமற்றத்தருமங்களாலேவந்த) நன்மை, ஆகாதாகிவிடும்-தீமையாயவிடும், எ-று.

வி. தீச்சொல்லாவன, பொய், குறளை, கடுஞ்சொல், என்பவை. ஒருவன், நல்லவையாகச்சொல்லுஞ்சொற்களிலே ஒன்றாகுனும்தீச்சொற்படும்பொருளின்பயன்பிறர்க்கு உண்டாவதானல், என்றுசொல்வாரும் உண்டு.

இனி, இதற்குப்பிறன்கோட்கூறலாய்ப்பிற்கூறியவுரையே சிறந்துகாட்டிநிற்பபோலும், ஒருவன்நல்லவையாகச்சொல்லுஞ்சொற்களிலேஒன்றானுந்தீயசொல்லின்பொருளால்வரும்பிரயோசனமானதுஉண்டானால்மேலேசொல்லியசொற்களால்வந்தநன்மைமுழுதுந்தீதாகிவிடும்,எ-று.

இதற்கு, வி. இதுவழக்கிடஞ்செய்யுளிடமென்னு மிரண்டிடத்துமேற்கும். வழக்கிடத்துப், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், என்னுஞ்சொற்பொருளால்வருவன. இவற்றால் நன்மைதீதாகிவிடுதலாவது, ஒருவனுள்ளவளவையும்மெய்சொல்லி யொருதரம்பொய்சொல்லுவானாலும், ஒருவன்தன்குற்றத்தையே உள்ளளவுமாராய்ந்து உரைத்து ஒருதரம்பிறன்குற்றத்தை எண்ணி அவன்புறத்துச்சொல்லுவானாயினும், இன்சொல்லையேசொல்லி யொருதரம் கடுஞ்சொல்லைச்சொல்லுவானாயினும், பெரும்பயனுடையசொற்களையே சொல்லியொருதரம்பயனில்லாதசொல்லைச்சொல்லுவானாலும், முன்பெற்றநன்மைஇழந்துதீயோனென்றுஎண்ணநிற்பது. இனிச்செய்யுளிடத்துத் தீச்சொற்பொருட்பயனாவன, எழுத்தானந்தஞ் சொல்லானந்தம்பொருளானந்தமுதலியவும், பொருத்தவியலுள்விலக்கியனவும், அணியியலுட்பிரிபொருட்சொற்றொடர்முதலியவாகச்சொல்லிய பதினைந்தும்பிறவுமாமெனக்காண்க. அவையெல்லாம்இங்கேசொன்னால், விரியும். ஒன்றாயினுமென்பது, ஒன்றானுமெனவிகாரப்பட்டுநின்றது. தீச்சொற்பொருட்பயன், தீமை.

௱௨௯. தீயினாற்சுட்டபுண் ணுள்ளாறுமாறாதே
நாவினாற்சுட்டவடு.

ப. எ-து-ஒருவனையொருவன் தீயினாற்சுட்டபுண் மெய்க்கட்கிடப்பினு மனத்தின்கணப்பொழுதேயாறுமவ்வாறன்றிவெவ்வுரையுடையநாவினாற் சுட்டவடுவதன்கண்ணுமென்றுமாறாதென்றவாறு.

வி, ஆறிப்போதலாற்றீயினாற்சுட்டதனைப்புண்ணென்றுமாறாமையி னாவினாற்சுட்டதனைவடுவென்றுங்கூறினார். தீயும்வெவ்வுரையுஞ்சுடுதற்றொழிலா லொக்குமாறுமையாற்றீயின்வெவ்வுரைகொடிதென்பதுபோதாவினிற்குறிப்பா லவந்தவேற்றுமையலங்காரம்-இவைமூன்றும்பாட்டானுமொழியடக்கங்கூறப்பட்டது.

பு. (தீ-டு) எ-இ-ள். தீயினாற்சுட்டபுண்-(ஒருவனையொருவன்) நெருப்பினாலேசுட்டபுண்ணானது, உள்ளாறும்-(சரீரத்திலேகாணப்பட்டிருந்தாலும்) மனத்தினிடத்திலே (அப்பொழுதே) ஆறிப்போம், (அப்படிக்கில்லாமல்) நாவினாற்சுட்டவடு-(கொடுஞ்சொல்லையுடைய) நாவினாலே (ஒருவன்) சுட்டவ

டுவானது(காயமானது,) ஆறாது-(அந்தமனத்தினிடத்தும்எப்பொழுதும்) ஆறாதாம், எ-று.

வி. ஆறிப்போவதினாலேதீயினாற்சுட்டதைப்புண்ணென்றும், ஆறாததினாலேநாவினாற்சுட்டதை வடுவென்றுஞ், சொன்னார். தீயுங்கொடுஞ்சொல்லுஞ்சுடுகிறதொழிலினாலேயொக்கும் பின்பு. ஆறாமையினாலேதீயினுங்கொடுஞ்சொல் அதிகமெனவருதலால், இதுகுறிப்பினாலே ஒப்புடையிருபொருள் வேற்றுமைபடவந்தவேற்றுமையென்னும்அலங்காரம். இவை மூன்றுபாட்டாலும் சொல்லடக்கஞ்சொல்லப்பட்டது.

௱௩௰. கதங்காத்துக்கற்றடங்கலாற்றுவான்செவ்வி
யறம்பார்க்குமாற்றினுழைந்து.

ப. எ-து-மனத்தின்கண் வெகுளி தோன்றாமற் காத்துக் கல்வியுடையனாய் அடங்குதல் வல்லவனது செவ்வியை அறக்கடவுள் பார்த்து நிற்கும் அவனையடையு நெறியின்கண் நின்றென்றவாறு.

வி. அடங்குதல் மனம் புறத்துப் பரவாது அறத்தின்கண்ணே நிற்றல்-செவ்வி-தன்குறைகூறுதற்கேற்ற மனமொழி முகங்கள் இனியனாங்காலம்-இனிப் பெற்றியானை யறந்தானே சென்றடையு மென்பதாம்-இதனான் மனவடக்கங் கூறப்பட்டது.

பு. (கத-து) எ-இ-ள். கதங்காத்து-(மனசிலே) கோபம் (உண்டாகாமல்) பாதுகாத்து, கற்றடங்கலாற்றுவான்-(எல்லா நூல்களையும்) படித்து (மன) அடக்கத்தைச்செய்வானுடைய, செவ்வி-சமையத்தை, அறம்பார்க்கும்-தருமமாகிய (தெய்வம்) பார்த்திருக்கும், ஆற்றினுழைந்து-(அவனை அடைகிறதுக்கேற்ற) வழியிலேபுகுந்து, எ-று.

வி. மன அடக்கஞ்செய்தலாவது, மனம்புறத்திலேசெல்லாமல், தேவபத்தியோகஞானநெறிகளிலேதின்றொடுங்கியிறக்கப்பண்ணுதல். உம்.

சினமிறக்கக்கற்றாலுஞ்சித்தியெல்லாம்பெற்றாலும்,
மனமிறக்கக்கல்லார்க்குவாயேன்பராபரமே. எனக்காண்க.

சமையம், தன்குறையாறி சொல்லுதற்கேற்றமனமுஞ்சொல்லுமுகமும் இனிமையானவனாயிருக்கின்றகாலம். இந்தக்குணமுடையவனைத்தருமந்தானேசென்று அடையுமென்பது, கருத்து. இதினாலே, மனஅடக்கஞ்சொல்லப்பட்டது.

௰௪. அதிகாரம்.

ஒழுக்கமுடைமை.

ப-ம. ஒழுக்கமுடைமை-அஃதாவது - தத்தமவருணத்திற்குரியவாகக் கூறப்பட்டவொழுக்கத்தினையுடையராதல - இதுமெய்முதலியவடங்கினார்க்கல்லதுமுடியாதாகலினடக்கமுடைமையின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (ஒழு-மை) அதாவது, தங்கள் தங்கள்சாதிகளுக்கும் அந்தந்தச்சாதிகள் நிற்கவேண்டிய நிலைகளுக்குஞ்சொல்லப்பட்ட ஒழுக்கநடைகளையுடையவராவதைச்சொல்வது. இது மனமொழிமெய்கள்அடங்கினவருக்கல்லதுமுடியாதாதலால், அடக்கமுடைமையின்பின்வைக்கப்பட்டது.

௱௩௧. ஒழுக்கம்விழுப்பந்தரலானொழுக்க
முயிரினுமோம்பப்படும்.

ப. எது-ஒழுக்கமெல்லார்க்குஞ்சிறப்பினைத்தருதலானவ்வொழுக்க முயிரினுமபாதுகாக்கப்படுமென்றவாறு.

வி. உயர்ந்தார்க்குமிழிந்தார்க்குமொப்பவிழுப்பந்தருதலிற்பொதுப்படக்கூறினார்-சுட்டுவருவிக்கப்பட்டது - அதனானன்மைவிழுப்பந்தருவதாயதொழுக்கமென்பதுபெற்றும் - உயிரெல்லாப்பொருளினுஞ்சிறந்ததாயினு மொழுக்கம்போலவிழுப்பந்தாராமையினுயிரினுமோம்பப்படுமென்றார்.

பு. (ஒழு-ம்) எ-இ-ள் ஒழுக்கம்விழுப்பந்தரலால்-ஒழுக்கமாவது (எல்லார்க்குஞ்) சிறப்பைத்தருவதினாலே, ஒழுக்கமுயிரினுமோம்பப்படும்-அந்த ஒழுக்கமானது (ஒருவனுடைய) உயிரைப்பார்க்கிலும்பாதுகாக்கப்படும், எறு.

வி. உயர்ந்தார்க்குமிழிந்தார்க்குஞ்சமமாகச்சிறப்பைத்தருவதினாலே, இன்னார்க்கென்னாது பொதுப்படச்சொன்னார். அவ்வொழுக்கமெனச்சுட்டு இடைச்சொல், வருவிக்கப்பட்டது. இதினாலேசிறப்பைத்தருவது, ஒழுக்கமென்பதுபெற்றோம். உயிர் எல்லாப்பொருளினுஞ்சிறந்ததானாலும், ஒழுக்கத்தைப்போலேசிறப்பைத்தராததினாலே, அதைஉயிரினுமோம்பப்படுமென்றார்.

௱௩௨. பரிந்தோம்பிக்காக்கவொழுக்கந்தெரிந்தோம்பித்
தேரினுமஃதே துணை.

ப. எது-ஒழுக்கத்தினைப்பொன்றுமழிவுபடாமற்பேணிவருந்தியுங்காக்கவறங்களெல்லாவற்றையு மாராய்ந்தவற்றுணன்மைசீருந் துணையாவதியாதெனறுமனத்தைப்பொருக்கித்தேர்ந்தாலுந் துணையாயுடிவதவொழுக்கமேயாகலானென்றவாறு.

வி. பரிந்துமெனனுமுற்றுமமைமவிகாரத்தாற்றொக்கது- இவையிரண்டுபாட்டானுமொழுக்கத்தற்சிறப்புக்கூறப்பட்டது.

பு. (பரி-ணை) எ-இ-ள். தெரிந்து-(பலதருமங்களையும்) ஆராய்ந்து, ஓம்பி-(அந்தத்தருமங்களுள் இம்மைமறுமையிரண்டிக்குந்துணையாவது எது என்றுமனத்தைஅடக்கிப்) பாதுகாத்து, தேரினும்-தெளிந்தாலும், அஃதே துணை-அந்த ஒழுக்கமேதுணையாவது, (ஆதலால்) ஒழுக்கம்-ஆசாரத்தை, பரிந்து-(ஒன்றினாலுங்கெடாமல்) வருத்தப்பட்டும், ஓம்பி-பாதுகாத்து, காக்க-காவல்செய்க, எ-று.

வி. தெரிந்தோம்பித்தெரினுமென்றதினாலே, செயப்படுபொருளும், வினைப்பெயரும், வருவிக்கப்பட்டன. காவலுட்பட்டவர் துன்பப்பட்டுமெய்யக் காவல்செய்தலுமுண்டாதலால், அதைநீக்குதற்பொருட்டு, ஓம்பிக்காக்கவென்றார். பரிந்து என்ற இடத்தில், உம்மைகுறைந்துநின்றது. அது, வருந்தி ஓம்புதல், வருந்தாது ஓம்புதல், என்னுமிரண்டினுள்ளே, வருந்தியுமோம்புகவென்றலின், எதிரதுதழீஇயவெச்சஉம்மை. இவையிரண்டுபாட்டாலும் ஒழுக்கத்தின்சிறப்புச்சொல்லப்பட்டது.

௱௩௩. ஒழுக்கமுடைமைகுடிமையிழுக்க
மிழிந்தபிறப்பாய்விடும்.

ப. எது-எல்லார்க்குந்தந்தம்வருணத்திற்கேற்றவொழுக்கமுடைமையே குலனுடைமையாம்; அவ்வொழுக்கத்திறத்தலவருணத்தாற்றாழ்ந்தவருணமாய் விடுமென்றவாறு.

வி. பிறந்தவருணந்தனிழ்ந்தகுலத்தாராயினுமொழுக்கமுடையராக வுயர்குலத்தாராவராகவிற்குடிமையாமெனவு முயர்ந்தவருணத்துப் பிறந்தாராயினுமொழுக்கத்திறறவறந்தாழ்ந்தவருணத்தாராவராகவிழிந்தபிறப்பாயவிடுமென்றுங்கூறியவாறு. உளவழிப்படுங்குணத்தினுமிலவழிப்படுங்குற்றம

பெரிதென்றவாறு--பயனிடையீடின்றியெய்துதலின்விரைவுபற்றியவ்வேறு வாகியவினைகளைப்பயனாக்கவோதப்பட்டன.

பு. (ஒ-ம்) எ-இ ள். ஒழுக்கமுடைமைகுடிமை-(எல்லா ரீக்குந் தங்கள் தங்கள்வருணத்திற்கு ஏற்ற) ஆசாரத்தையுடைய ராகுந்தன்மையேகுலமுடையராகுந்தன்மையாம், இழுக்கம்-(அந்த ஒழுக்கத்திலே)தவறுகிறது, இழிந்தபிறப்பாய்விடும்-(பிறந்தகுலத்திலேநின்றும்) தாழ்ந்தகுலமாய்விடும், எ-று.

வி. இழிந்தகுலத்தாராலும் ஒழுக்கமுடையவராஞல், அதிலேநின்றும் உயர்ந்தகுலத்தராவராதலாலே, குடிமையா மென்றும்; உயர்ந்தகுலத்திற்பிறந்தாராலும், ஒழுக்கத்தி லேதவறினல், தாழ்ந்தகுலத்தராவராதலால், இழிந்தபிறப் பாய்விடுமென்றுஞ்சொன்னர். ஒழுக்கம் உண்டானபோது உண்டாகுங்குணத்தைக்காட்டிலும், அதுஇல்லாதபோதுஉண் டாகுங்குற்றம்பெரிதென்பதாம். பிரயோசனம் இடைவிடா மல் உண்டாதலாலே, அந்தவிரைவுநோக்கி ஒழுக்கம் உண்டா கிறதும் இல்லையாகிறதுமாகியவதுவினைகளே, குடிமை,இழிந் தபிறப்பு, என்னும்பயனாகச்சொல்லப்பட்டன. பிறப்பு,ஆகு பெயர். இனி இந்தக்குறளுக்குவேறோர்முடிபு.

இழுக்க மிழிந்தபிறப்பாய்விடுமாதலால் ஒழுக்கமுடை மையே குடிமை எனமுடித்து, உயர்ந்தகுலத்திற்பிறந்தாரா யினும் அந்தக்குலத்துக்குஉரியஒழுக்கத்தைக்கைவிட்டால்அதி னலே உடனேதாழ்ந்தகுலத்தராவதுநிச்சயமாதலால், அந்த நிச்சயந்தோன்ற, ஒழுக்கமுடைமையேகுடிமையென்றூர்என த்தேற்ற ஏகாரம்வருவித்துப்பொருளுரைத்துக்கொள்க.

ாகூச. மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான்
பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்.

ப. எது-கற்றவேதத்தினைமறந்தாராயினுமவர்வருணங்கெடாமையிற்பி ன்னுமஃதோதிக்கொள்ளலாமந்தணனுயர்ந்தவருணந்தனதொழுக்கங்குன்றக் கெடுமென்றவாறு.

வி. மறந்தவழியிழிகுலத்தாராகாமையின்மறக்கலாகாதென்னுங்கருத் தானமறப்பினுமென்றார்-சிறப்புடையவருணத்திற்குமொழியவேயேனையவரு ணங்கட்குங்கொள்ளப்படும்.

வி. (மறு-ம்) எ-இ-ள். ஒத்து-(கற்ற) வேதத்தை, மறப்பினும்-மறந்துபோனாலும், கொளலாகும்-(அந்தவருணங்கெடாததினாலேபின்னும் அதை) கற்றுக்கொள்ளலாம், பார்ப்பான்பிறப்பு-பிராமணன் குலமானது, ஒழுக்கங்குன்ற-(அவனுடைய) ஆசாரங்குறைந்தால், கெடும்-கெட்டுப்போம், எ-று.

வி. மறந்தபோதுதாழ்ந்தகுலத்தானாவானாதலால், மறக்கலாகாதென்னுங்கருத்தைக்கொண்டு, மறப்பினுமென்றார். சிறந்தவருணத்துக்குச்சொல்லவே, மற்றவருணங்களும், ஒழுக்கங்குன்றக்கெடுமென்பதுதானேபெறப்படும்.

௱௩௫. அழுக்காறுடையான்கணாக்கம்போன்றில்லை
யொழுக்கமிலான்கணுயர்வு.

ப. எ-து-அழுக்காறுடையான்மாட்டாக்கமில்லாதாற்போலவொழுக்கமில்லாதவன்மாட்டுமுயர்ச்சியில்லையென்றவாறு.

வி. உவமைபாற்றொழுக்கமில்லாதவன்சுற்றத்திற்குமுயர்ச்சியில்லையென்பதுபெற்றாம்-என்னை-கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுந் தலகூறாதலின்-உயர்வு-உயர்குலமாதல்.

பு. (அழு-வு) எ-இ-ள். அழுக்காறுடையான்கண்-பொறாமையுடையவனிடத்திலே, ஆக்கம்போன்று-செல்வம் (இல்லாதது) போல, ஒழுக்கமிலான்கண்-ஆசாரமில்லாதவனிடத்திலும், இல்லையுயர்வு-உயர்ச்சியில்லை, எ-று.

வி. கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுடுப்பதூஉமுண்பதூஉமின்றிக்கெடுமென்பார் ஆதலால், பொறாமையுடையவன் சுற்றத்திற்குஞ்செல்வமில்லாததுபோல, ஒழுக்கமில்லாதவன் சுற்றத்திற்கும உயர்வில்லையென்பது, உவமையாற்பெற்றோம். உயர்வு, உயர்குலமாவது.

௱௩௬. ஒழுக்கத்தினொல்காருரவோரிழுக்கத்தி
னேதம்படுபாக்கறிந்து.

ப. எ-து-செய்தற்கருமைநோக்கியொழுக்கத்தாற்சுருக்கார்-மனவலியுடையாரவ்விழுக்கத்தாற்றமக்கிழிகுலமாகிய குற்றமுண்டாமாற்றையறிந்தென்றவாறு.

வி. ஒழுக்கத்திற்சுருக்கமதனையுடையார்மேலேற்றப்பட்டது-கொண்டவிரதம்விடாமைபற்றியுரவோரென்றார்.

பு. (ஒழு-து) எ-இ-ள். இழுக்கத்தின்-(ஒழுக்கந்) தவறுகிறதினாலே, ஏதம்-(தனக்குஇழிகுலமாகிய)குற்றமானது, படுபாக்கு-உண்டாக, அறிந்து-தெரிந்துகொண்டு, ஒழுக்கத்தின்-(செய்வதற்கு அருமையென்றுநினைந்து) ஆசாரத்தினாலே, ஒல்கார்-தளரார். உரவோர்-அறிவுடையார், எ-று.

வி. ஒழுக்கத்தினின்றுதளர்தலை. அதனையுடையவர்மேலேற்றப்பட்டது. அழிவினாற்கொண்டவிரதம்விடாததைக்குறித்து, உரவோர் என்றார். என்னெனில்,

பழியஞ்சான்வாழும்பசுவுமழிவிறந்
கொண்டவருந்தவம்விட்டானுங்கொண்டிருந்த
வில்லஞ்சிவாழுமெருதுமிவர்மூவர்
நெல்லுண்டநெஞ்சிநக்கோர்நாய். எனக்கொண்டவிரதத்தையழிவினால்விட்டவனையிகழப்படுதலாற் காண்க. ஒல்கல்; தளர்தல், குறைதல் படுபாக்கு என்றதிற் பாக்கு என்பது வினையெச்சவிகுதி. வான்பான்பாக்கினவினையெச்சம்பிற, என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. அறிந்து என்னும்வினையெச்சமிங்கே, காரணப்பொருட்டாய், அறிந்ததினாலேயெனநின்று, ஒல்கார் என்னும், தெரிநிலைஎதிர்மறைமுற்றுவினைகொண்டுமுடிந்தது.

௱௩௭. ஒழுக்கத்தினெய்துவர்மேன்மையிழுக்கத்தி
னெய்துவரெய்தாப்பழி.

ப. எ-து-எல்லாருமொழுக்கத்தானேமேம்பாட்டையெய்துவர் அதனினிழுக்குதலானேதாமெய்துதற்குரித்தல்லாதபழியையெய்துவரென்றவாறு.

வி. பகைபற்றியதாப்பழி கூறியவழியதனையுமிழுக்கம்பற்றியுலகமடுக்குமென்றுகொள்ளுமாகலின்எய்தாப்பழியேயெய்துவரென்றார்- இவ்விரண்டுபாட்டானுமொழுக்கமுள்வழிப்படுங்குணமுமில்வழிப்படுங்குற்றமுங்கூறப்பட்டன.

பு. (ஒழு-ழி) எ-இ-ள். ஒழுக்கத்தின்-(யாவரும்) ஆசாரத்தினாலே, எய்துவர்மேன்மை-மேலாந்தன்மையைப்பொருந்துவார், இழுக்கத்தின்-(அதிலே) தவறுதலாலே, எய்தாப்பழி-(தாம்) பொருந்துதற்கு (உரிமை) யில்லாதநிந்தையை, எய்துவர்-பொருந்துவார், எ-று.

வி. ஒழுக்கத்திலே தவறினவனைப்பகையினாலே ஒருவன் அடாதிருந்ததைச் சொல்வானானால், அதுவும் அவனுக்கு அடுக்குமென்று உலகஞ்சொல்லுமாதலால், எய்தாப்பழியெய்துவரென்றார். இவையிரண்டுபாட்டாலும், ஆசாரமுண்டானபோது உண்டாகுங்குணமும், இல்லாதபோது உண்டாகுங் குற்றமுஞ், சொல்லப்பட்டன.

௱௩௮. நன்றிக்குவித்தாகுநல்லொழுக்கந்தீயொழுக்க
மென்றுமிடும்பைதரும்.

ப. எ-து-ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாயிருமையினும் இன்பம் பயக்கும்; தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாயிருமையினுந் துன்பம் பயக்குமென்றவாறு.

வி. நன்றிக்கு வித்தாகுமென்பதனால் தீயவொழுக்கம் பாவத்திற்குக் காரணமாதலும், இடும்பை தருமென்பதனால் நல்லொழுக்கம் இன்பந் தருதலும் பெறும். ஒன்று நின்றே யவற்றை முடிக்குமாகலின் இதினும் பின்விளைவு கூறப்பட்டது.

பு (நன்-ம்) எ-இ-ள். நல்லொழுக்கம்-(ஒருவனுக்கு) நல்ல ஆசாரமானது, நன்றிக்கு-தருமத்துக்கு, வித்தாகும்-(காரணமாகிய) விதையாகி (இம்மைமறுமையிரண்டிலும் இன்பம்விளைக்கும்,) தீயொழுக்கம் பொல்லாதநடையானது, (பாவத்திற்குக்காரணமாகியவிதையாகி) என்றும்-(இம்மைமறுமையிரண்டிடத்தில்) எப்போதும், இடும்பைதரும்-துன்பம்விளைக்கும், எ-று.

வி. வித்தாகுமென்றதினாலே, விளைத்தல்பெறும்; நல்லொழுக்கம் நன்றிக்குவித்தாகுமென்றதினாலே, தீயொழுக்கம்பாவத்திற்குவித்தாகும்என்பதும்; தீயொழுக்கமிடும்பைதருமென்றதினாலே, நல்லொழுக்கம் இன்பந்தரும் என்பதும்; என்றும் என்றதினாலே, இம்மைமறுமையிரண்டிடத்தும்என்பதும்; பெறப்பட்டன. வித்து நிலத்திலேயூன்றப்பட்டதுபோல, இந்த இரண்டு ஒழுக்கங்களுள் ஒன்று ஒருவனிடத்திலே நிலைத்திருக்குமானாற் பின்பு தன்பயனாகிய இன்பத்தையாவது துன்பத்தையாவது தருவது நிச்சயமாதலால், அதைவித்தென்றது, எது உருவகவலங்காரம். இதினாலேபின்விளைவு, சொல்லப்பட்டது.

௱௩௯. ஒழுக்கமுடையவர்க்கொல்லாவே தீய
வழுக்கியும்வாயாற் சொலல்.

ப. எ-து-மறந்துந்தீயசொற்களைத்தம் வாயாற்சொல்லுந் தொழில்க ளொழுக்கமுடையவர்க்குமுடியாவென்றவாறு.

வி. தீயசொற்களாவன பிறர்க்குத்தீங்குபயக்கும்பொய்முதலியவும் வருணத்திற்குரியவல்லனவுமாம் அவற்றது பன்மையாற்சொல்லுந்தொழில்பலவாயின-சொல்சாதியொருமை-சொல்லெனவேயமைந்திருக்க வாயாலெனவேண்டாது கூறினார் நல்லசொற்களைப்பிறப்பித்தற்றாமவேண்டியதனைச்சிறப்பு முடித்தற்கு-இதனைவடநூலார்தாற்பரியமென்ப.

பு. (ஒழு-ல்) எ-இ-ள் வழுக்கியும்-மறந்தும். தீய-தீமையையுடைய (சொற்களை,) வாயாற்சொல்ல-(தம்) வாயினாலே சொல்லுந் தொழில்கள், ஒழுக்கமுடையவர்க்கொல்லா-நல்லொழுக்கமுடையார்க்குக்கூடாதவை, எ-று.

வி. தீயசொற்களாவன, பிறருக்குத்தீங்குதரும் பொய் முலானவையுங், குலத்திற்குத்தகாதவையுமாம் அவைபலவாதலாலே, சொல்லுந்தொழில்களும்பலவாயின. சொல, என்பது, குறைந்துநின்றது. அது. சாதியொருமை. சொல்லெனவே அமைந்திருக்க, வாயாற்சொலலெனவேண்டாது சொன்னது. தீயசொற்பழக்கமில்லாதவாய் என்று, அதனைச்சிறப்பித்தற்கு, எனக்காண்க. இதை,வடநூலார்தாற்பரியமென்பார். நினைத்துச்சொல்லுதலுங்கூடாது என்றதைத்தழுவிநின்றதினாலே, வழுக்கியும் என்ற உம்மை, இறந்ததுதழுவிய எச்சவும்மை. ஒழுக்கமுடையவர்மறந்துசொல்லினும் பிறர்க்குநன்மைதருஞ்சொற்களையேசொல்லுவரென்பதுகருத்து இதினாலே ஒழுக்கமுடையவர்பேசுந்திறஞ்சொல்லப்பட்டது.

௱௪௰. உலகத்தோடொட்டவொழுகல்பலகற்றுங்
கல்லாரறிவிலாதார்.

ப. எ-து-உலகத்தொடுபொருந்தவொழுகுதலைக்கல்லாதார்பலநூல்களையுங்கற்றாராயினுமறிவிலாதாரென்றவாறு.

வி. உலகத்தொடுபொருந்தவொழுகுதலாவதுயர்ந்தோர்பலருமொழுகியவாற்றொழுகுதல்-அறநூல்சொல்லியவற்றுள்இக்காலத்திற்கேலாதனவொழிந்துசொல்லாதவற்றுள்ளேற்பனகொண்டுவருதலானவையு மடங்கவுலகத்தோடொட்டவென்றுகல்விக்குப்பயனறிவுமறிவிற்குப்பயனொழுக்கமுமாகலின்வ

வொழுகுதலைககலலாதாாயலகறறுமறிவிலாரெனறுகூறிஞா-ஒழுகுதலைகக றறலாவதடிபபடுதல-இவையிரணடுபாட்டாலுஞசொலலாலுஞசெயலாலும வருமொழுககஙகளெலலாமொருவாறறொகுததுககூறபபடடன.

பு. (உல-ர்) எ-இ-ள். உலகத்தோடொட்டவொழுகல்-உலகத்தோடுபொருந்தநடப்பதை, கல்லார்-கற்றிலாதவர், பல கற்றும்-(நூல்கள்) பலவற்றையுங்கற்றிருந்தாராயினும், அறிவிலாதார்-ஞானமில்லாதவர், எ-று.

வி இங்கேஉலகமென்றது, உயர்ந்தவரை, எனக்காண்க. உலகத்தொடுபொருந்தவொழுகுவதாவது, உயர்ந்தோர்யாவரும்நடந்தவழியிலேநடப்பது. பழையனகழிதலும் புதியன புகுதலும்வழுவலகாலவகையினானேயென்றாராதலால், தருமசாத்திரங்கள்சொல்லியவைகளில் இக்காலத்துக்குவராதவைகள்நீங்கிச், சொல்லாதவைகளில் வந்திருப்பவைகளைக்கொண்டுவருதலால், அவையும் அடங்க, உலகத்தோடொட்ட என்றும்; கலவிக்குப்பிரயோசனம் அறிவும், அறிவுக்குப்பிரயோசனம ஒழுக்கமுமாதலால், அந்த ஒழுக்கநடையைக்கல்லாதார், பலகற்றுமறிவிலாதாரென்றுஞ்,சொன்னார் ஒழுகலைக்கற்றலாவது, அவர்நடந்தபடிநடக்கத்தொடங்குவது. இதனாலே ஒழுக்கமுடையவர்நடக்குந்திறம், எதிர்மறைமுகத்தாற்சொல்லப்பட்டது.

௰௫. அதிகாரம்.

பிறனில்விழையாமை.

ப-ம. பிறனிலவிழையாமை—அஃதாவது - காமமயககததாறபிறனுடையவிலலாளைவிருமபாமை-இஃதொழுககமுடையவாமாட்டே நிகழவதாக விழுககமுடைமையினபினவைககபபடடது.

பு-ம். (பிற-மை)அதாவது, (காமமயக்கத்தினாலே)அந்நியனுடையமனையாளைவிரும்பாதிருப்பதைச்சொல்வது.இது ஒழுக்கமுடையார்க்கே உரியதாதலால், அதன்பின்வைக்கப்பட்டது.

௱௪௧. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

ப. எது-பிறனுக்குப்பொருளாந்தன்மையுடையாளைக் காதலித்தொழுகுகின்ற அறியாமை ஞாலத்தின்கண் அறநூலையும் பொருணூலையும் ஆராய்ந்தறிந்தார்மாட்டில்லையென்றவாறு.

வி. பிறன்பொருள் பிறனுடைமை-அறம்பொருளென்பனவாகுபெயர்-செவ்வெண்ணின்றொகைதொக்குநின்றது-இன்பமொன்றையுமே நோக்குமின்பநூலுடையாரித்தீயொழுக்கத்தையும் பாரதிகமென்றுங்கூறுவாராகலின் அறம்பொருள்கண்டார்கணில்லென்றாரெனவே யப்பேதைமையுடையார்மாட்டறமும் பொருளுமில்லையென்பதுபெறப்பட்டது.

பு. (பிற-ல்) எ-இ-ள். பிறன்பொருளாட்பெட்டு-பிறனுக்குப்பொருளாந்தன்மையுடையவளை விரும்பி, ஒழுகும்பேதைமை-(அதற்கு இசைவாக) நடக்கப்பட்ட அறியாமையானது, ஞாலத்து-உலகத்திலே, அறம்பொருள்கண்டார்கண்-தருமசாத்திரத்தையும் அர்த்தசாத்திரத்தையும்அறிந்தவரிடத்தில் இல்லை, எ-று.

வி. பிறன்பொருள், அந்நியன் உடைமை. அறம்பொருள் என்பவை, ஆகுபெயர். அறமும்பொருளும் என்றுஉம்மைவைத்தெண்ணுது, அறம்பொருள்என்றுஎண்ணினதற்குச், செவ்வெண் என்றுபெயர். இந்தச்செவ்வெண், தொகைபெறவேண்டுமென்பதுஇலக்கணம்என்னெனில்,பெயர்ச்செவ்வெண்ணேயென்றாவெணுவெண்ணுள்குந்தொகைபெறாஉம், என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. அதுதொகைபெறுங்கால், அறம்பொருளிரண்டும், எனப்பெறும். இங்கேபெறுதுநின்றது, செய்யுள்விகாரம். இன்பம் ஒன்றையுமேகுறிக்கப்படுங்காமசாத்திரமுடையவர், இந்தத்தீய ஒழுக்கத்தையும் பாரதிகமென்றுஞ்சொல்லுவராதலால்,அறம்பொருள்கண்டார்கணில்என்றார்; எனவே அந்தப்பேதைமையுடையவரிடத்தில், அறமும்பொருளும் இல்லையென்பதுபெறப்பட்டது.

௱௪௨. அறன்கடைநின்றாருளெல்லாம்பிறன்கடை
நின்றாரிற்பேதையாரில்.

ப. எது-காமங்காரணமாகப்பாவத்தின்கணின்றாரெல்லாருள்ளும்பிற

னிலலானைககாதலிததவனவாயிறகடசென றுநினறானைபபோலபபேதையாரில லையெனறவாறு.

வி. அறததினீககபபடடமையின அறனகடையெனறார-அறனகடைநி னறபெணவழிசசெலவானையுமவரைவினமகளிரொடுமிழிகுலமகளிரொடுஙகூடி யினபநுகரவானையுமபோலவறமுமபொருளுமிழநதலேயனறிபிறனகடைநி னறாரசசததாறறுஙகருதியவினபமுமிழககினறாராகலிறபேதையாரிலலெனறார எனவேயினபமுமிலலையெனபதுபெறபபடடது.

பு. (அற-ல்) எ-இ-ள். அறன்கடைநின்றாரு ளெல்லாம்-(காமங்காரணமாகப்) பாவத்திலேநிற்கின்ற எல்லாருள்ளும், பிறன்கடைநின்றாரில்-பிறன் (இல்லாளைவிரும்பி அவனுடைய வீட்டின்) தலைக்கடையிலே(சென்று)நின்றவனைப்போல, பேதையாரில்-அறிவில்லாதவர் இல்லை, எ-று.

வி. அறத்திலேநீக்கப்பட்டு அதின்பின்னிற்பது, பாவமாதலால் அதை, அறன்கடையென்றார். பாவத்திலேநின்ற (பெண்போனவழியிலேபோவாராகிய) பெண்வழிச்செல்வானையும், வேசியரோடும் தாழ்ந்தகுலப்பெண்களோடுங்கூடி இன்பத்தை அநுபவிப்பவனையும், போல அறமும்பொருளும் இழந்துபோவதுமல்லாமல், பிறன்கடைநின்றவர், அச்சத்தினாலே தாம்நினைத்த இன்பமும் இழந்துபோவாராதலாலே, பிறன்கடைநின்றாரிற்பேதையாரில் என்றார்: எனவேபிறன்கடைநின்றவர்க்கு, அறம்பொருள் இன்பங்கள்மூன்றும் இல்லையென்பது, பெறப்பட்டது.

௱௪௩. விளிந்தாரின்வேறல்லர்மன்றதெளிந்தாரிற் றீமைபுரிந்தொழுகுவார்.

ப. எது-தமமையையுறாதாரிலலாளகணணே பாவஞசெயதலைவிருமபி யொழுகுவாருயிருடையோருமிறநதாரேயாவரெனறவாறு.

வி. அறமபொருளினபஙகளினபயனெயதாமையின விளிநதாரினவேற லலரெனறுமவாதீமைபுரிநதொழுகுவதிலலுடையவரதுதெளிவுபறறியாகவிற றெளிநதாரிலலெனறுஙகூறினார.

பு. (விளி-ர்) எ-இ-ள். தெளிந்தார்-(தம்மைச்)சந்தேகப் படாதவருடைய, இற் றீமைபுரிந்து-மனைவியிடத்திலேபாவஞ் செய்வதைவிரும்பி, ஒழுகுவார்-நடப்பவர், (உயிருள்ளவரானாலு ம்) விளிந்தாரின்-இறந்தவரில்நின்றும், மன்ற-நிச்சயமாகவே, வேறல்லர்-வேறுபாடு உடையவரல்லர், எ-று.

வி. அறம்பொருளின்பங்களின்பிரயோசனத்தை அடை யாததினாலே, விளிந்தாரின்வேறல்லர் என்றும்; அவர்பாவஞ் செய்வதைவிரும்பிநடப்பது இல்லாட்டியை உடையவர்தெ ளிவுகொண்டாதலால்,தெளிந்தாரில்என்றும்; சொன்னார்.மன் ற என்பது, நிச்சயம் என்னும்பொருள்படவந்த உரிச்சொல்; என்னெனில், மன்றவெங்களவிதேற்றஞ்செய்யும், என்னுஞ் சூத்திரநோக்கிக்காண்க.

௱௪௪. எனைத்துணையராயினுமென்னாந்தினைத்துணையுந் தேரான்பிறனில்புகல்.

ப. எது-எததுணை பெருமை யுடையராயி னுமொருவாகவியாதாயமுடி யுங்காமமயககததாறறினையள வுநதமபிழையையோராதுபிற னுடைய விலவி னகடபுநதலெனறவாறு.

வி. இநதிரனைபோலவெலலாபபெருமையுமிழநதுசிறுமையையடைவதனு ககிலெனனுமெனறா-எனனீரதியாதிரபோலவிலைவகூறனினனீரவலலநெடுநத காயெனபுழிபோலவுயாததறகடபனமையொருமைமயஙகிறறு-தேரானபிற னெனபதனைததமமையையுருசபிறனென னுரைபபாருமுளா.

பு. (எ-ல்) எ-இ-ள். எனைத்துணையராயினும்-எவ்வளவு (பெருமை) யுடையவராயிருந்தாலும், என்னும்-(ஒருவர்க்கு) எப்படியாய்முடியும், தினைத்துணையுந்தேரான்-(காமமயக்க த்தினாலே) தினையளவுந்தம்முடையகுற்றத்தையுணராமல்,பிற னில்புகல்-அந்நியனுடையமனையிடத்துநுழைவது, எறு.

வி. இந்திரனைப்போல எல்லாப்பெருமையும் இழந்துசி றுமை அடைவதுகுறித்து, என்னும்என்றார். என்னீரறியாதீர் போலவிவைகூறனின்னீரவல்லநெடுந்தகாய்; என்றஇடத்தில், நீரறியாதீர் என உயர்த்திச்சொல்லுதற்பொருட்டுவந்தபன் மைப்பால், நின் என்னும் ஒருமைப்பாலோடு இணங்கிநின் றதுபோல; எனைத்துணையர் என உயர்த்திச்சொன்னபன்மை ப்பால், தேரான்என்னும்ஒருமைப்பாலொடு, பால்வழுவமை தியாகஇணங்கிநின்றது. தேரான்பிறன் என்பதைத், தம்மை ச்சந்தேகப்படாதபிறன், என்றுசொல்லுவாருமுண்டு. இனியி க்குறளுக்குவேறோர்முடிபு.

பிறனில்புகல்-(ஒருவனுடையமனைவியைவிரும்பி) அவ

ன்மனையினிடத்திற்போய்ச்செய்யும் இழிதொழிலாலே, (தம க்குவருங்குற்றத்தை) தினைத்துணையும்-(காமமயக்கத்தினாலே) தினையளவாகிலும், தேரான்-உணராதவர், எனைத்துணையராயினும்-எவ்வளவு (பெருமை) யுடையவராயிருந்தாலும், என்னாம்-(அவர்க்கு அதினாலே) என்னபிரயோசனமாம், (ஒன்றுமில்லை,) எ-று.

இதற்கு வி. அகலிகையைவிரும்பிப்போன இந்திரனைப்போலே, பெல்லாப்பெருமையும் இழந்துசிறுமைப்படுவதைக்குறித்து, எனைத்துணையராயினுமென்றுமென்றார். எவனென்னும்வினாவினைச்சொல், என் எனவிகாரமாய்ப்பெயர்த்தன்மைப்பட்டுநின்று, ஆம் என்னும்பயனிலைகொண்டு, கற்றதனாலாயபயனென்னென்றதுபோல, இன்மைகுறித்துநின்றது (இப்படியேவழக்கிடத்தும், ஒன்றும் ஆகாது என்னும்பொருள்பட, என்னும், என்ன ஆகும், எனவருதல்காண்க. கால்கழுவுதல் என்றாற்போல, பிறனில்புகுதல் என்றது, இடக்கரடக்கல்; இடக்கர் என்பது, இழிவுசொல்; அதைமறைத்துச்சொல்லுஞ்சொல்லை, இடக்கரடக்கல், என்றுசொல்வது: ஆகலாலே பிறனில்லினிடத்திலேபோய் அவர்செய்யும்இழிதொழிலைத்தாம்சொல்லத்தகாது என்பதுநோக்கிப், பிறனில்புகல் என்றார். அது காரணமாதலால் இங்கே அதன்காரியமாகியகுற்றந்தோன்றநின்றது. தினைத்துணையுந்தேரார் எனச்சொல்லவந்தவர், தேரான் எனச்செறுதலாகியகோபம்பற்றிப் பால்வழுவமைதியாகச்சொன்னார்; உவப்பினுமுயர்வினுஞ்சிறப்பினுஞ்செறலினுமென்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. உம்மையிரண்டினுள், முன்னையது, உயர்வுசிறப்பு; பின்னையது, இழிவுசிறப்பு.

௱௪௫. எளிதெனவில்லிறப்பானெய்துமெஞ்ஞான்றும்
விளியாதுநிற்கும்பழி.

ப. எது-எய்துதலெளிதெனறுகருதிப்பினவிளைவுகருதாதுபிறனிலலினகணிறபானமாயதவினறியெஞஞானறுநிலைநிறகுங குடிபபழியினையெயதுமெனறவாறு.

வி. இலவினகணிறததலஇலலாளகணனெறிகடநதுசெறல.

பு. (எ-ழி)எ-இ-ள். எளிதெனை-(இப்போதுபெறுவது) அரிதல்லவென்று எண்ணிப், (பின்உண்டாவதை எண்ணாமல்) இல்லிறப்பான்-(பிறன்) இல்லிடத்துப்புகுவான், (அதினாலே) எஞ்ஞான்றும்-எக்காலத்திலும்,விளியாதுநிற்கும்பழி-இறவாமலேநிற்கின்ற (குல) நிந்தையாகிய (பாவத்தை,) எய்தும்-அடைவான், எ-று.

வி. இந்தக்குறளிடத்தும், மேல்வருங்குறளிடத்தும், இல்லிறப்பான்என்றது, இடக்கரடக்கல். இறத்தல், போதல்.

௱௪௬. பகைபாவமச்சம்பழியெனநான்கு
மிகவாவாமில்லிறப்பான்கண்.

ப. எது-பிறனிலலாளகணெறிகடநதுசெலவானிடததுபபகையுமபாவமுமசசமுஙகுடிபபழியுமெனனுமிநநானகு குறறமுமொருகாலுநீஙகாவாமெனறவாறு.

வி. எனவேஇருமையுமிழததலபெறறம-இவை யாறுபாடடாலுமபிறனிலவிழைவானகடகுறறஙகூறபபடடது.

பு. (ப-ண்) எ-இ-ள். இல்லிறப்பான்கண்-(பிறனுடைய மனையாளைவிரும்பி அவன்) மனையினிடத்திலேசெல்பவனிடத்தில், பகைபாவமச்சம்பழியெனநான்கும்-பகையும்பாவமும் பயமும் (குல) நிந்தையுமாகியஇந்தநான்குகுற்றங்களும்,இகவாவாம்-(ஒருக்காலும்) நீங்காதிருப்பவையாம், எ-று.

வி. எனவே இருமை இன்பங்களும் இழந்தவனென்பது பெறப்பட்டது. இவையாறுபாட்டாலும்,பிறன்மனைவியை விரும்புவான்குற்றஞ்சொல்லப்பட்டது.

௱௪௭. அறனியலானில்வாழ்வானென்பான்பிறனியலாள்
பெண்மைநயவாதவன்.

ப. எது-அறனொடுபொருந்தியவியலபொடுகூடியிலவாழவானெனறுசொலலபபடுவானபிறனுககுரிமைபூணடவனுடையவியலபினையுடையாளதுபெணடனமையைவிருமபாதவனெனறவாறு.

வி. ஆணுநபெணடிணிககழசசிககணவநதது-இலலறஞசெயவானெனபபடுவானவனேயெனபதாம.

பு. (அற-ன்)எ-இ-ள். அறனியலான்-தருமசுபாவத்தோடேகூடி, இல்வாழ்வானென்பான்-இல்லினிடத்திலே வாழ்பவ

னென்று (எல்லாராலும்) புகழப்படுவோன், பிறனியலாள்-பிற னுக்கு (உரிமைபூண்டு அவன்சாயலின்படிநடக்கும்) நடையினையுடையவளது, பெண்மைநயவாதவன்-பெண்தன்மையை விரும்பாதவன், எ-று.

வி. ஆன், என்னும்மூன்றாம்வேற்றுமையுருபு, இங்கே உடனிகழ்ச்சிப்பொருள்படநின்றது. அவனேஇல்லறத்திற்கு உரியவனென்பது, கருத்து.

௱௪௮. பிறன்மனைநோக்காதபேராண்மைசான்றோர்க்
கறனொன்றோவான்றவொழுக்கு.

ப. இ-து-பிறன்மனையாளையுட்கொள்ளாதபெரியவாண்டகைமைசால்புடையார்க்கறனுமாநிரம்பியவொழுக்கமுமாமென்றவாறு.

வி. புறப்பகைகளையடக்குமாண்மையுடையார்க்குமுட்பகையாகியகாமமடக்குதற்கருமையினதனையடக்கியவாண்மையைப்பேராண்மையென்றார்-ஒன்றோவென்பதெண்ணிடைச்சொல-செய்தற்கரியவறனுமொழுக்கமுமிதனைச்செய்யாமையேபயக்குமென்பதாம.

பு. (பிற-ரு) எ-இ-ள். பிறன்மனைநோக்காத-பிறன்மனையாட்டியை (விரும்பிமனத்திற்) குறியாத, பேராண்மை-பெரிய ஆண்தன்மை, சான்றோர்க்கு-(புருடத்தன்மை) நிறைந்தவர்க்கு, அறனொன்றோ-தருமம்ஒன்றுதானோ, ஆன்றவொழுக்கு-உயர்ந்த ஒழுக்கமுமாம், எ-று.

வி. புறத்திலிருக்கும்பகைகளையடக்கும் ஆண்மையுடையவர்க்கும், உட்பகையாகியகாமத்தையடக்குவது, அருமையாதலால், அதையடக்கிய ஆண்மையைப், பேராண்மையென்றார். செய்வதற்கு அருமையாகிய அறமும் ஒழுக்கமும், பிறன்மனைநோக்காதிருப்பது, தானேதரும் என்பதுகருத்து.

௱௪௯. நலக்குரியார்யாரெனினாமநீர்வைப்பிற்
பிறற்குரியாடோடோயாதார்.

ப. இ-து-அச்சந்தருங்கடலாற்சூழப்பட்டவுலகத்தெல்லாநன்மையுமெய்துதற்குரியாராவரெனிற் பிறனொருவனுக்குரிமையாகியாளுடையதோளைச்சேராதாரென்றவாறு.

வி. அகலமாழமபொருளுடைமைமுதலியவற்றுனவிடப்படாமையினாமநீரென்றா-உரிச்சொலவீறுதிரிந்துநின்றது--நலத்திற்கென்பதுநலகென்குறைந்துநின்றது-இருமையினுநன்மையெய்துவரென்பதாம.

பு. (நல-ர்) எ-இ-ள். நாமநீர்வைப்பில்-அச்சத்தைத்(தரும்) நீரார்சூழப்பட்ட (கடலாற்சூழப்பட்ட)உலகத்தில்,நலக்குரியார்யாரெனின்-(எல்லா) நன்மைகளுக்கும் உரியவர்யாவரென்றால், பிறர்க்குரியாள்-பிறனொருவனுக்கு உரிமையானவளுடைய, தோடோயாதார்-தோளைச்சேராதவர், எ-று.

வி. அகலம், ஆழம், பொருளுடைமை, முதலானவைகளாலே அளவிடப்படாமற், பார்த்தமாத்திரமே பயத்தைத்தரத்தக்கநீர், வேறேயில்லாததினாலே, கடலை நாமநீரென்றார். நாம் என்பது, அச்சமாகியபொருளைத்தருவதோர்உரிச்சொல், பேநாமுருஉமெனவரூஉங் கிளவியாமுறைமூன்றுமச்சஞ் சுட்டலுமென்பதினால், அறிக; இங்கே அது நாம, என அகரச்சாரியைபெற்றுநின்றது. நலத்துக்குஎன்பது, நலக்குஎன, *அத்துச்சாரியைகுறைந்துநின்றது. இம்மைமறுமையிரண்டிலும்நன்மைபொருந்துவார் இவர் என்பதுகருத்து.

௱௫௰. அறன்வரையானல்லசெயினும்பிறன்வரையாள்
பெண்மைநயவாமைநன்று.

ப. எது-ஒருவனறததைததனககுரிததாககசசெயயாதுபாவஙகளைசசெயயுமாயினுமவனுககுபபிறனெலலைககணிறபாளதுபெணமையைவிருமபாமையுணடாயினதுநனறெனறவாறு.

வி இககுணமேமேறபடடுததோனறுமெனபதாம இவைநானகுபாடடாலுமபிறனிலவிழையாதானகடகுணஙகூறபபடடது.

பு. (அற-று) எ-இ-ள். அறன்வரையான்-(ஒருவன். தருமத்தைத் (தனக்கு உரிமையாகச்) செய்துகொள்ளாதவனாகி, அல்லசெயினும்-(தருமம்) அல்லாதபாவங்களைச்செய்வானாயினும், (அவனுக்குப்) பிறன்வரையாள்-பிறனுடையஎல்லையிலே நிற்பவளுடைய, பெண்மைநயவாமை-பெண்தன்மையைப் (பார்த்து) விரும்பாதிருப்பது, (ஒன்றும் உண்டானால்) நன்று-(அது) நன்மையுடைத்தாம், எ-று.

வி. இந்த ஒருதருமமுமே, எல்லாப்பாவங்களையும் அடக்கி, மேற்பட்டுநிற்குமென்பது, கருத்து. நன்று என்பது, விகுதிப்பொருள்விகுதிபெற்றுநின்ற பகுபதமெனக்கொள்க. பிறன்வரையாள்பெண்மைநயவாதவன் அல்லசெய்யான்செயி

னுமது பொறுத்தல்வேண்டுமென்பார், இதனைப் பொறையுடைமையைச்சாரவைத்தார். இவைநான்குபாட்டாலும், பிறனில்லாளைவிரும்பாதவன் குணஞ்சொல்லப்பட்டது.

௰௬. அதிகாரம்.

பொறையுடைமை.

ப-ம. பொறையுடைமை-அஃதாவது-காரணம்பற்றியாதன் மடமையானாதலொருவன் றமக்கு மிகைசெய்தவிடத்துத் தாமுமதனையவன்கட்செய்யாது பொறுத்தலையுடையராதல்-நெறியினீங்கியசெய்தாரையும்பொறுக்கவேண்டுமென்றற்கிது பிறனில்விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

பு-ம். (பொ-மை) அதாவது, (காரணம்பற்றியாகிலும், அறியாமையினாலே ஆகிலும், ஒருவன்தமக்குக்குற்றஞ்செய்த போதுதாமும் அவனிடத்தில் அந்தக்குற்றத்தைச்செய்யாமலேதனம்) பொறுத்திருப்பதைச்சொல்வது. அதிகார அடைவு, மேலேசொல்லப்பட்டது.

௱௫௧. அகழ்வாரைத்தாங்குநிலம்போலத்தம்மை
யிகழ்வார்ப்பொறுத்தறலை.

ப. எ-து-தன்னையகழ்கின்றாரை வீழாமற்றாங்குவதாய நிலம்போலத் தம்மையவமதிப்பாரைப்பொறுத்தறலையாயவறமென்றவாறு.

வி. இகழ்தன்மிகையாயினசெய்தலுஞ்சொல்லலும்.

பு. (அக-லை) எ-இ-ள். அகழ்வாரை-(தன்னைத்) தோண்டுகின்றவரை, தாங்குநிலம்போல-(விழாமலே) சுமக்கின்றபூமியைப்போல, தம்மையிகழ்வார்-தம்மைநிந்திப்பவரை, பொறுத்தல்-சகிக்கிறது, தலை-தலைமையான (சிறந்த) தருமமாம், எ-று.

வி. அகழ்வாரைத்தாங்குநிலம்போல, வென எடுத்துக்காட்டிய உவமையினாலே, தம்மைக்கொலைசெய்வதையொத்த குற்றஞ்செய்வாரையும்பொறுப்பதும், பொறுத்திருந்தே அவரைப்பாதுகாப்பதுஞ் சிறந்ததருமமென்பது, பெறப்பட்டது.

௱௫௨. பொறுத்தலிறப்பினையென்றுமதனை
மறத்தலதனினுநன்று.

ப. எ-து-பொறைநன்றாகலான்மாறுத்தற்கியன்றகாலத்தும்பிறர்செய்தமிகையைப்பொறுக்கவதனையுட்கொள்ளாதபொழுதேமறத்தல்பெறினப்பொறையினுநன்றென்றவாறு.

வி. மிகையென்றதுமேற்சொல்லியவிரண்டனையும்-பொறுத்தானுமுட்கொள்ளப்படுதலின்மறத்தலையதனினுநன்றென்றார்.

பு. (பொ-று)எ-இ-ள். இறப்பினை-(பொறுப்பதுநலமாதலாலேதண்டிக்கக்கூடுமானகாலத்திலும்பிறர் இகழ்ந்துசொல்லுதல்பிழைசெய்தலாகிய)மிகுதியை,பொறுத்தல்-பொறுக்கவேண்டும், அதனை என்றுமறத்தல்-அதை (மனசிலேவையாமல்) என்றைக்குமறந்துவிடுவது, அதனினுநன்று-அந்தப்பொறுமையிலும்நன்று, எ-று.

வி. இறப்பு என்றது, மிகுதி; அதுஇங்கே, சொல்லத்தக்கதுஞ்செய்யத்தக்கதுஞ்சமம், சொல்லத்தகாததுஞ்செய்யத்தகாததும்மிகுதி, யாதலால் அவையிரண்டனையுங்குறித்துநின்றது. மேலேமிகுதியான்மிக்கவைசெய்தாரை என்ற இடத்து இந்த உரைபொருந்தாதெனில், பொருந்தும். என்னை, சமநிலையென்பது நடுவுநிலைமை, அதுதப்பினதுமிகுதி, நடுவுநிலைமைதப்பினதினாலே, சொல்லத்தகாதவையுஞ், செய்யத்தகாதவையுமாகிய, மிக்கவைகளை யெனப்பொருள்படுமாதலாற்காண்க. இவை இரண்டையும்பொறுத்த இடத்தும், மனத்திலே நினைக்கப்படுமாதலால், மறப்பதை அதனினும்நன்றென்றார்.

௱௫௩. இன்மையுளின்மைவிருந்தொரால்வன்மையுள்
வன்மைமடவார்ப்பொறை.

ப. எ-து-ஒருவனுக்குவறுமையுள்வைத்துவறுமையாவதுவிருந்தினரையேற்றுக்கொள்ளாதுநீக்குதலதுபோலவன்மையுள்வைத்துவன்மையாவதறிவின்மையான்மிகைசெய்தாரைப்பொறுத்தலென்றவாறு.

வி. இஃதெடுத்துக்காட்டுவமை-அறனல்லாதவிருந்தொரால்பொருளுடைமையாகாதவாறுபோலமடவார்ப்பொறையுமென்மையாகாதென்பதுகருத்து.

பு (இ-றை)எ-இ-ள். இன்மையுளின்மை-(ஒருவனுக்கு) இல்லாமைபலவற்றுள்ளும்இல்லாமையாவது, விருந்தொரால்,

விருந்தினரைப் (பாதுகாவாது) விலக்குவது, வன்மையுள்வன்மை-(அதுபோல) வல்லமைபலவற்றுள்ளும்வல்லமையாவது, மடவார்ப்பொறை-அறிவில்லாதார் (செய்தகுற்றத்தோடவரையுந்) தாங்குவது, எ-று.

வி. மடவார் என்ற இடத்து, ஐஉருபும் இறந்ததுதழுவியஎச்சஉம்மையுங்குறைந்துநின்றன, ஆதலால், மடவார்செய்தகுற்றங்களைப்பொறுப்பதுமல்லாமல், அவரையுந்தாங்குவது, என்பதுபெறப்பட்டது. அவரையுந்தாங்குதலாவது, அவர்செய்தகுற்றங்களைமறந்து அவரைப்பாதுகாப்பது. இதுஎடுத்துக்காட்டுஉவமையாதலால், மேல்வரும்விருந்துவிலக்கலாகிய இன்மையைக்குறிக்க, முன்வந்தபொருளில்லாமைகள்பலவும்பொருளுடைமைகளாம், அதுபோல, மேல்வரும்மடவார்ப்பொறையாகியவன்மையைக்குறிக்க, முன்வந்தமனம்பொறிவழிச்செல்லாது அடக்குதல்முதலியபலவல்லமைகளும்எளிமைகளாம், எனக்கொள்க. விருந்துவிலக்கலின்மேற்பட்டதரித்திரமும், ஒருவர்செய்தகுற்றத்தைப்பொறுத்து அவரையும் பேணுதலின்மேற்பட்டவல்லமையும்உலகத்தில்லை, யாதலால், விருந்தோம்பினவன் எல்லாப்பொருளும் உடையவனாவான்; ஒருவர்செய்தகுற்றத்தைப்பொறுத்து அவரையும்பாதுகாப்பவன், எல்லாவல்லமைகளும் உடையவனாவான்; என்பதுகருத்து.

௱௫௪. நிறையுடைமைநீங்காமைவேண்டிற்பொறையுடைமை
போற்றியொழுகப்படும்.

ப. இ-து-ஒருவன்சால்புடைமைதன்கணின்றுநீங்காமையைவேண்டுவனாயினவனாற்பொறையுடைமையைத்தன்கணழியாமற்காத்தொழுகப்படுமென்றவாறு.

வி. பொறையுடையார்க்கல்லதுசால்பில்லையென்பதாயிற்று—இவைநான்குபாட்டானும்பொறையுடைமையதுசிறப்புக்கூறப்பட்டது.

பு. (நி-ம்) எ-இ-ள். நிறையுடைமை-(ஒருவன் எல்லாநற்குணங்களுங்குறைவுபடாத) நிறையுடைமையாகிய சால்புடைமையானது, நீங்காமைவேண்டின-(தன்னிடத்திலே) நீங்காதிருப்பதைவிரும்புவானானால், (அவனாலே) பொறையுடை

மை-பொறுமையுடையவனுந் தன்மையை, போற்றியொழுகப்படும்-(தன்னிடத்தில் அழியாமலே) பாதுகாத்து நடக்கப்படும், எ-று.

வி. பொறுமையுடையவனே, எல்லாநற்குணங்களு நிறைந்தவனென்பதாயிற்று. இவைநான்குபாட்டாலும், பொறையுடைமையின் சிறப்புச்சொல்லப்பட்டது.

௱ருரு. ஒறுத்தாரையொன்றாகவையாரேவைப்பர்
பொறுத்தாரைப்பொன்போற்பொதிந்து.

ப. இ-து - பிறன் தமக்குத் தீங்கு செய்தவழிப் பொறுத்தவனை யொறுத்தாரை யறிவுடையா ரொருபொருளாக மனத்துக் கொள்ளாரதனைப் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து கொள்வரென்றவாறு.

வி. ஒறுத்தவர் தாமுந் தமக்குத் தீங்கு செய்தவனோடொத்தலின் ஒன்றாக வையாரோ வென்றார்-பொதிந்து வைத்தல்-சாலவுடைமை பாராட்டி யிடைவிடாது நினைத்தல்.

பு. (ஒ-று) எ-இ-ள். ஒறுத்தாரை-(ஒருவன்செய்தகுற்றத்தைப்பொறுமல் அவனைத்) தண்டித்தவரை, ஒன்றாகவையார்-(அறிவுடையோர்) ஒருபொருளாகவேமனத்துட்கொள்ளார், பொறுத்தாரை-(அதைப்)பொறுத்தவரை,பொன்போற்பொதிந்துவைப்பர்-பொன்னைப்போலேமுடிந்து மனத்துள்வைப்பார், எ-று.

வி. ஒறுத்தவர்தாமுந்தக்குற்றத்தைச்செய்தஅவனோடே ஒத்துப்போவதினாலே, ஒன்றாகவையாரோவென்றார். ஏகாரந், தெளிவுப்பொருள்படநின்றது. பொன்னைமுடிந்துவைத்துப்பாதுகாப்பதுபோல, அந்தப்பொறையுடைமையைப்பற்றி, அறிவுடையோர் அவரைஇடைவிடாமலே, நினைப்பரென்பதாம்.

௱ருசா. ஒறுத்தார்க்கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும்புகழ்.

ப. இ-து - தமக்குத் தீங்கு செய்தவனை யொறுத்தார்க்குண்டாவது அவ்வொருநாளையின்பம்; பொறுத்தார்க்கு உலகமழியுமளவும் புகழுண்டா மென்றவாறு.

வி. ஒருநாளையின்பம் அந்நாளொன்றி லுண்டாகியதுமுடிந்ததேமென

தருக்கியிருக்கும் பொய்யின்பம்-ஆதாரமாகியவுலகம் பொன்றும்புகழும்பொன்றுமாகவினைறயுடையவுலகென்னுஞ்சொல் வருவிக்கப்பட்டது.

பு. (ஒ-ழ்) எ-இ-ள். ஒறுத்தார்க்கு-(தமக்குத்தீங்குசெய்தவனைத்) தண்டித்தவர்க்கு, (உண்டாவது) ஒருநாளையின்பம்-(பழியொடுபட்ட அந்த) ஒருநாளையின்பமே.(யாம்) பொறுத்தார்க்கு-(அதைப்) பொறுத்தவர்க்கு, பொன்றுந்துணையும்புகழ்-(உலகம்) அழியும் அளவும்புகழ், (உண்டாம்.) எ-று.

வி. பொறுத்தார்க்குப்பொன்றுந்துணையும்புகழென்றதனல், ஒறுத்தார்க்கு அவ்வாறேபழியென்பதும், பெறப்படும். ஒருநாளையின்பமாவது, அந்த ஒருநாளிலும்நினைத்தது முடித்தோம் என்று, கருவித்து இருக்கும், பொய்யின்பமாம். ஆதாரமாகியஉலகம் அழியப்புகழும் அழியுமாதலால், இடைபுடைய உலகம் என்பது, வருவிக்கப்பட்டது.

௱௫௭. திறனல்ல தற்பிறர் செய்யினுநோய்நொந்
தறனல்லசெய்யாமைநன்று.

ப. எது-செய்யத்தகாதகொடியவற்றைத்தனக்கட்பிறர்செய்தாராயினும்மவர்க்கதனலவருந்துன்பத்திற்குநொந்துதானறனல்லாதசெயல்களைச்செய்யாதிருத்தலொருவனுக்குநன்றென்றவாறு.

வி. உம்மைசிறப்பும்மை-துன்பத்திற்குநோதலாவது—உம்மையெரிவாயதிரயத்துவீழ்ப்பாகொலென்றுபரிதல்.

பு. (திற-று) எ-இ-ள். திறனல்ல-(செய்யத்)தகாதவற்றை, தற்பிறர்செய்யினும்-பிறர்தன்னிடத்திலே செய்தாராலும், (அவற்றைப்பொறுத்து) நோய்நொந்து-(அவர்க்கு அதினலேவருந்) துன்பத்திற்குத்தான்வருந்தி, அறனல்ல-தருமமல்லாதசெயல்களை, செய்யாமைநன்று-(அவரிடத்திலே) செய்யாதிருப்பது (ஒருவனுக்கு) நன்மை, எ-று.

வி. செய்யினும் என்ற உம்மை, இழிவுசிறப்புப்பொருள்படநின்றது. பிறர்செய்தகுற்றங்களைப்பொறுப்பதுமன்றியவர்க்கு அதினலேவருந்துன்பத்திற்கும் வருந்துதற்கு, உம்.

தம்மையிகழ்ந்தமைதாம்பொறுப்பதன்றிமற்
றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தா-லும்மை
யெரிவாய்திரயத்துவீழ்ப்பர்கொலென்று
பரிவதூஉஞ்சான்றோர்கடன், எனக்காண்க.

௱௫௮. மிகுதியான்மிக்கவைசெய்தாரைத்தாந்தந்
தகுதியான்வென்றுவிடல்.

ப. எது-மனசசெருககாறறவகட டுபவறறைச செயதாரைததாநதம முடையபொறையான வெனறுவிடுகவெனறவாறு.

வி. தாமுமவாகடகுபவறறைதசெயது தோலாது பொறையானவரின மேமபடடுவெலகவெனபதாம-இவைநானகுபாடடானும பிறாசெயதனபொறுததலசொலலபபடடது.

பு (மி-து-ல்) எ-இ-ள், மிகுதியான்-நடுவுநிலைமைதப்பினதினாலே, மிக்கவைசெய்தாரை-(தம்மிடத்திலே) தகாதவற்றைச்செய்தவரை, தாந்தந்தகுதியால்-தாம் தம்முடையபொறுமையினாலே, வென்றுவிடல்-செயித்துவிடுக, எ-று.

வி. தகுதி. ௧. நடுவுநிலைமை, ௨. பொறுமை, ௩. அறிவு, ௪. நற்குணம். மிகுதி. ௧. அநியாயம், ௨. அதிசம், உயர்வு, கூட்டம், பூரிப்பு, துர்க்குணம், இவைபருபகமாங்கால், தக்கான்-ள்-ர்-எம்-தக்கவன்-ள்-ர்-து-வை-மிக்கான்-ள்-ர்-எங்-மிக்கவன்-ள்-ர்-து-வை-எனவும்வரும். இன்னுமேலேதகுதியெனவொன்றுநன்றேயெனவும், இங்கேமிகுதியான் எனவும், இவர்சொல்லியதினாலேயுங்காண்க. இன்னும்தகுதி-தகை எனவும், மிகுதி-மிகைஎனவும்வரும்போதுமிப்பொருள்வாதல்காண்க. தாமும் அவரிடத்திலேதகாதவற்றைச்செய்து தோற்றுப்போகாமலே, பொறுமையினாலே, அவரில்மேற்பட்டுவெல்கவென்பதுகருத்து. இவைநான்குபாட்டாலும், பிறர்செய்த, தகாதவைபொறுப்பதுசொல்லப்பட்டது.

௱௫௯. துறந்தாரிற்றூய்மையுடையரிறந்தார்வா
யின்னாச்சொன்னோற்கிற்பவர்,

ப. எது-இலவாழககைககணினறேயுநதுறநதாரைபபோலததூயமை யுடையாரநெறியைககடநதாரவாயினனாசசொலலைபபொறுபபவரெனறவாறு.

வி. தூயமைமனமாசினமை-வாயெனவேணடாது கூறினா வேணடிய ததனிழிபுமுடிததறகு.

பு. (து-ர்) எ-இ-ள். துறந்தாரில்-(இல்லறத்திலேநின்றும்பற்றற்ற)முனிவரைப்போலே, தூய்மையுடையர்-புனிதமுடையவராவார், இறந்தார்வாய்-நடுவுநிலைமைகடந்தவர்வாயா

ற் (சொல்லப்பட்ட) இன்னாச்சொல், தீயசொற்களை, நோற்கிற்பவர்-பொறுப்பவர், எ-று.

வி. தூய்மை, களங்கமில்லாதமனப்பரிசுத்தம். இங்கே வாயெனவேண்டாது சொன்னதும், வேண்டியதாகிய அவர்வாயினிழிவுதோன்றற்கு, எனக்கொள்க. நோற்கிற்பவர்-என்பதில், பகுதி, நோன். கில், சாரியை இடைச்சொல். பகர ஒற்று, எதிர்கால இடைநிலை. அர், விகுதி. விகுதிக்கும் இடைநிலைக்கும் இடையிலேநின்ற-அகரம், சாரியை. வகரவொற்று, உடன்படுமெய். இது, எதிர்காலவினையாலணையும்பெயர். இப்பகுதியிலே முக்காலமுற்றுவினைகள்வருமாறு, நோற்றான், நோற்கின்றான், நோற்பான், எனவரும். இது, தொழிற்பெயராங்கால், நோன்றல், எனவும், வலித்தல்விகாரமாய். நோற்றல், எனவும்; வரும். எதிர்மறையிலே, நோனான், நோனாவுடம்பினகத்து, எனவரும். நோற்கிற்பவர்-என்றால், தவஞ்செய்பவர், எனவும்வருமெனில், வருமாயினும்; அதிலேபகுதி, நோல், என்பது. அதையெதிர்மறுத்து, நோற்பார்சிலர்,பலர்நோலாதவரெனவுணர்க. இறப்பு, மிகுதி.

௱௬௰. உண்ணாதுநோற்பார்பெரியர்பிறர்சொல்லு
மின்னாச்சொனோற்பாரிற்பின்.

ப. எ-து-விரதங்களாலுணவைத்தவிர்ந்துற்றநோயைப்பொறுப்பாரெல்லாரினும்பெரியராவர்பெரியராவது தம்மைப்பிறர்சொல்லுமின்னாதசொல்லைப் பொறுப்பாரிற்பின்னென்றவாறு.

வி. பிறரறிவில்லார்-நோலாமைக்கேதுவாகியவிருவகைப்பற்றுநின்றே நோற்றவின்னாச்சொற்றோற்றாரிற்பின்னென்றார்-இவையிரண்டுமாட்டாருமப்பிறரிலிக்கைக்கச்சொல்லியனபொறுத்தல்கூறப்பட்டது.

பு. (உ-ள்) எ-இ-ள். உண்ணாதுநோற்பார்-(விரதங்களாலே) போசனத்தைவிட்டுத் (தங்களையடைந்தநோயைப்) பொறுப்பவர்,பெரியர்-(எல்லாரினும்)பெருமையுடையவர்,(அவர் பெருமையுடையவர் ஆவது,) பிறர்சொல்லுமின்னாச்சொல்-(தம்மைப்பார்த்துப்) பிறர்சொல்லுந்தீயசொற்களை, நோற்பாரிற்பின்-பொறுப்பவரின்பின், எ-று.

வி. பிறர், அறிவில்லாதவர். தவஞ்செய்யாமைக்கு ஏது

வாகிய இருவகைப்பற்றுங் கூடிநின்றே நோற்றதினாலே, இன்னாச்சொன்னோற்பாரிற்பின் என்றார். இனி இக்குறளுக்குவேறோர்முடிபு.

அறிவிலார் இகழ்ந்துசொல்லுந்தீயசொற்களைக்காரணமில்லாமலே பொறுப்பவராகிய இல்லறத்தார்க்குப் பின்பு உண்ணாமைக்காரணத்தினாலே தங்களையடைந்தநோயைப்பொறுப்பவராகியதுறவறத்தார்பெருமையுடையவராவர், எ-று.

இதற்கு-வி. பிறர்சொல்லுமின்னாச்சொல்லென்றதினால், அறிவிலாரென்பதும், இகழ்ந்தென்பதும், பெறப்பட்டன. உண்ணாதவென்னுமெதிர்மறைவினையெச்சமிங்கே, காரணப்பொருட்டாய்நின்றது ஆதலாலே, துறந்தார்க்கு அஞ்ஞாநாதியந்தக்கரணப்பலமுதலாயினகுறைந்துதேய்தலால், நோற்றல் எளிதாயும், இல்லறத்தார்க்கு அந்த உண்ணுதற்றொழிலைவிடாமையினாலே, பசையுறைத்திருக்கவுங்காரணமில்லாமலே நோற்றலால், அரிதாயுமிருந்தது. ஆதலாலேபிறர்சொல்லுமின்னாச்சொன்னோற்பாரிற்பின் உண்ணாதுநோற்பார்பெரியர் என்றார். பெரியர் என்றது, ஆக்கவினைக்குறிப்புச்சொல். இங்கே அது ஆக்கச்சொல்குறைந்துநின்றது; பெரியராவர், எனவருவிக்கப்பட்டது. என்னை, ஆக்கவினைக்குறிப்பாக்க மின்றியலா. என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. உண்ணுதற்றொழிலினாலே, யஞ்ஞாநாதியந்தக்கரணங்களுறைக்குமென்பதற்கும், அதனைவிடத்தேயுமென்பதற்கும், உம்.

தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப்
பொய்க்கோலங்கொள்ளவொழியுமோ-வெக்காலு
முண்டிவினையுளுறைக்குமெனப்பெரியோர்
கண்டுரைவிட்டமயல்.

இ-ள். வயிறுநிறையவுண்டு வாய்நிறையவாசனையோடு கூடியதாம்பூலந்தின்று தலைநிறையப் பூக்களையுந்தரித்துப்பொய்யாகிய ஆடையாபரண அலங்காரங்களையுக்கொண்டதினாலே நீங்குமோ நீங்காது எப்போதும் உண்ணுதற்றொழிலினாலேபலப்படுமென்றுபெரியோர்களறிந்து அந்தத்தொழிலைவிடக்கூடக்கைவிடப்பட்ட அஞ்ஞானமென்றவாறு. இதற்குத்தக்கோலமென்ற இடத்தில் இறந்தது

தழுவிய எச்சவும்மைகுறைந்துநின்றது அதனாற் சோற்றையுண்டென்பதுவருவிக்கப்பட்டது. இவை இரண்டுபாட்டாலும், பிறர் இகழ்ந்துசொல்லியவைபொறுத்தல்சொல்லப்பட்டது.

௰௭. அதிகாரம்.

அழுக்காறாமை.

ப-ம். அழுக்காறாமை-அஃதாவது அழுக்காறென்பதோர் சொல் அதற்குப்பொருண்மேலேயுரைத்தாம்-அச்சொற்பின் னழுக்காறனைச்செய்யாமையென்னும்பொருள்பட வெதிர்மறையாகாரமும் மகாரவைகாரவிகுதியும்பெற்றழுக்காறாமையென நின்றது இப்பொறாமையும் பொறைக்கு மாறுதலையாகவின் அதனை விலக்குதற்குப்பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது.

பு-ம். (அழு-மை) அதாவது, பொறாமைப்படாதிருத்தலைச்சொல்லுதல். அழுக்காறு என்பது, ஒருசொல். இது பொறாமைப்படாதிருப்பது என்னும்பொருள்பட, எதிர்மறை ஆகாரமும், மைவிகுதியும், பெற்று அழுக்காறாமை என நின்றது. இந்தப்பொறாமையும் பொறுமைக்குமறுதலை ஆதலால், அதைவிலக்குதற்குப்பொறையுடைமையின்பின் வைக்கப்பட்டது. மறுதலை, என்பது, பகை. (விரோதம்) இது ஆகுபெயராய்ப்பகைவரையுணர்த்திநிற்றலுமுண்டு. அது-தன்னை மறுதலைபழித்தகாலையுமென்பதனாற்காண்க.

௱௬௧. ஒழுக்காறாக்கொள்கவொருவன்றன்னெஞ்சத்
தழுக்காறிலாதவியல்பு.

ப. எ-து-ஒருவன்றன்னெஞ்சத்தின்கணழுக்காறென்னுங்குற்றமில்லாதவியல்பினைத்தனக்கோதியவொழுக்கநெறியாகக்கொள்கவென்றவாறு.

வி. இயல்பு அறிவொடுகூடியதன்மை அதனையுநன்மைபயத்தலின் ஒழுக்கநெறிபோலவுயிரினுமோம்புகவென்பதாம்.

பு. (ஒழு-பு) எ-இ-ள். ஒருவன்றன்னெஞ்சத்து-ஒருவன் தன்மனசிலே, அழுக்காறிலாதவியல்பு-பொறாமை (யென்னுங்குற்றம்)இல்லாதகுணத்தை, ஒழுக்காறாக்கொள்க-(தனக்குமுன்சொன்ன) ஒழுக்கநெறியாகக்கொள்க, எ-று.

வி. இந்தத்தன்மையுஞ்சிறப்பைத்தருதலால், ஒழுக்கத்தைப்போல் உயிரினுமோம்பப்படுமென்பதுகருத்து.

௱௬௨. விழுப்பேற்றி னஃதொப்பதில்லையார்மாட்டு
மழுக்காற்றி னன்மைபெறின்.

ப. எது-யாவர்மாட்டுமழுககாறறினமையுநிகருநதலையொருவனபெறுமா
யினமறறவனபெருஞசிறியபேறுகளுளபேறறினையொபபதிலலையெனறவாறு.
வி. அழுககாறுபகைவரமாட்டுமொழியறபாறறெனபாராயாரமாட்டு
மெனறார அனமைவேறுதல - இவையிரணடுபாட்டாலுமழுககாறினமையதகு
ணஙகூறபபட்டது.

பு. (விழு-ன்)எ-இ-ள். யார்மாட்டும்-யாவரிடத்தும், அழு
க்காற்றின்-பொறாமையிலேநின்றும், அன்மைபெறின்-(நீங்கு
வதாகிய) அல்லாதகுணத்தைப்பெறுவானானால், விழுப்பேற்றி
ன்-(அவன்பெறப்படும்) சிறந்தபேறுகளுள், அஃதொப்பதில்
லை-அதற்குநிகரானது இல்லை, எ-று.

வி. பொறாமை, பகைவரிடத்திலும்படக்கூடாதென்று
சொல்லவந்தவர், யார்மாட்டுமென்றார். அன்மை, அல்லாதத
ன்மை. இவையிரண்டுபாட்டாலும், பொறாமையில்லாததினா
லுண்டாகுங்குணஞ்சொல்லப்பட்டது.

௱௬௩. அறனாக்கம்வேண்டாதானென்பான்பிறனாக்கம்
பேணாதழுக்கறுப்பான்.

ப. எது - மறுமைககுமிமமைககுமறறுமபுகழுமாகியவுறபபுககளைதத
னககுவேணடாதானெனறுசொலலபபடுவான பிறனசெலவஙகணடவழியுவவா
தழுககாறறைசசெயவானெனறவாறு.
வி. அழுககறுததலெனினுமழுககாறேனினுமொககும-அழுககாறறை
சசெயபிறனகசேபொதமாமெனறவாறு.

பு. (அற-ன்)எ-இ-ள். அறனாக்கம்வேண்டாதானென்பா
ன்-(மறுமைக்குத்) தருமத்தையும்(இம்மைக்குச்)செல்வத்தை
யுந்(தனக்கு) விரும்பாதவனென்றுசொல்லப்பட்டவன், பிற
னாக்கம், பிறனுடையசெல்வத்தைக்-(கண்டபோது) பேணாத
ழுக்கறுப்பான்-(மகிழ்ந்து) பாதுகாவாமலேபொறாமைப்படு
வான், எ-று.

வி. அழுக்காறு என்னும் பண்புப்பெயர்ச்சொல், தொ
ழிற்பெயராங்கால், அகங்காரம் அகங்கரித்தல் எனவும், அதி
காரம் அதிகரித்தல் எனவும், வருவனபோல, அழுக்கறுத்தல்
எனவரும். அது, எவ்விடத்தும், முற்றுவினை எச்சவினைகட்குப்

பகுதியாமிடத்தும், அழுக்கறு எனநிற்கும். பொறாமைப்படு தலாலே, தனக்கேகுற்றமாம் என்பது, கருத்து.

௱௬௪. அழுக்காற்றினல்லவைசெய்யாரிழுக்காற்றி
னேதம்படுபாக்கறிந்து.

ப. எ-து-அழுக்காறேதுவாகவறனல்லவற்றைச்செய்யாரறிவுடையார் தந்நெறியாலறமக்கிருமையினுந் துன்பம்வருதலையறிந்தென்றவாறு.

வி. அறனல்லவையாவன-செல்வங்கல்விமுதலியனவுடையார்கட்டீங்கு நினைத்தலுஞ்சொல்லலுஞ்செய்தலுமாம்.

பு. (அழு-து) எ-இ-ள். அழுக்காற்றின்-பொறாமையினு லே, அல்லவைசெய்யார்-(தருமம்) அல்லாதவற்றைச்செய்யார், (அறிவுடையவர்) இழுக்காற்றின் -(அந்தப்பொறாமைப்படுவ தென்னும்) தீமைவழியினாலே, ஏதம்படுபாக்கறிந்து-(தமக்கு இம்மையிலுமறுமையிலும்) துன்பமுண்டாகஅறிந்து, எ-று.

வி. தருமமல்லவையாவன, செல்வங்கல்விமுதலானவை யுடையவரிடத்திலே தீங்குநினைப்பதும், சொல்வதுஞ், செய் வதும், ஆம்.

௱௬௫. அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னார்
வழுக்கியுங்கேடீன்பது.

ப. எ-து-அழுக்காறுபகைவரையொழிந்துங்கேடுபயப்பதொன்றாகலா னவ்வழுக்காறுடையார்க்குப்பகைவர்வேண்டாக்கெடுத்தற்கதுதானேயமை யுமென்றவாறு.

வி. அதுவேயெனுமேகாரமவிகாரத்தாற்றொக்கது.

பு. (அ-து) எ-இ-ள். ஒன்னார்வழுக்கியும்-பகைவரில்லாம லும், கேடீன்பது-கேட்டைத்தருவது, (ஆதலால்) அழுக்காறு டையார்க்கு-பொறாமையுடையவர் (கெடுதற்கு) அதுசாலும்- அது ஒன்றுமேபோதும், எ-று.

வி. ஆதலால், என்னும் எதுப்பொருளைத்தரும் இடைச் சொல்லும், அதுவே, என்னும்பிரிநிலை ஏகாரமுங், குறைந்து நின்றன. பிரிக்கப்பட்டார், பகைவர். பொறாமையுடையவர்தா மேகெடுவரென்பது, கருத்து.

௱௬௬. கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றமுடுப்பதூஉ
முண்பதூஉமின்றிக்கெடும்.

ப. எது-ஒருவனபிறாககுககொடுபபதனககணழுககறுபபானதுசுறற
மூடுககபபடுவதுமுணணபபடுவதுமினறிககெடுமெனறவாறு.

வி. கொடுபபதனககணழுககறுததலாவது-கொடுககபபடுமபொருளைப
பாறி. பொருமைசெயதல--சுறறங்கெடுமெனவேயவனகேடுசொலலாமையே
பெறபபடடது-பிறாபேறுபொருமைதன பேறறையேயனறிததனசுறறததின
பேறறினையுமிழபபிககுமெனபதாம.

பு. (கொ-ம்) எ-இ-ள். கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றம்-(ஒருவன்பிறர்க்கொருபொருளைக்) கொடுப்பதற்குப்பொறாமைப்படுவனுடையசுற்றமும், உடுப்பதுமுண்பதுமின்றிக்கெடும்-(எல்லாச்செல்வங்களையும்இழப்பதுமல்லாமல்) உடுக்கப்படுவதாகிய ஆடையும். உண்ணப்படுவதாகிய ஆகாரமுங்கூடக்கிடையாமல் அழிந்துவிடும், எ-று.

வி. சுற்றம் என்றஇடத்தில், இறந்ததுதழுவிய எச்சஉம்மை, குறைந்துநின்றது. அதினாலே, அவன் உடுப்பதுமுண்பதுமின்றி, விரைந்துகெடுவானென்பது, பெறப்பட்டது. சந்த இன்பங்குறித்து, உடுப்பதும் உண்பதும் என்பவை, உடுப்பதூஉம் உண்பதூஉம் எனநீண்டு, அளபெடுத்துநின்றன. உடுப்பதூஉமுண்பதூஉம், என இறந்ததுதழுவி, எண்ணிநின்ற, இழிவுசிறப்பு உம்மைகளாலே, எல்லாச்செல்வங்களையும் இழப்பதன்றி, என்பதும், எளிதிலேகிடைக்கப்படும், ஆடை ஆகாரங்கள்கூட, என்பதும்பெற்றும். கொடுப்பதழுக்கறுப்பான் என்றது, அன்சாரியையுங், கு-உருபுங், குறைந்துநின்ற நான்காம்வேற்றுமைச்சந்தி, கொடுப்பதைக்குறித்து அழுக்கறுப்பான், என இரண்டாம்வேற்றுமையுருபும்பொருளுமுடன்தொக்கதொகையெனினும், அமையும். இதுநேரேபொருள்படாமையால், யாற்றுநீர்ப்பொருள்கொள். அன்றிக்-கொடுப்பதழுக்கறுப்பானும், சுற்றமும், உடுப்பதூஉம், உண்பதூஉம் இன்றிக்கெடும், எனநிரனிறைப்பொருள்கோளாக்கினும், அமையும். பிறர்பெறும்பேற்றுக்குப்பொறாமைப்படுவது, தன்செல்வத்தையுந்தன்னையுங்கெடுப்பதுமல்லாமல், தன்சுற்றத்தார்செல்வத்தையுஞ்சுற்றத்தையுங்கெடுக்குமென்பதாம்.

௱௬௭. ஔவித்தழுக்கா றுடையானைச் செய்யவ
டௌவையைக் காட்டி விடும்.

ப. எ-து-பிறராக்கங்கண்டழிப் பொறாமையையுடையானைத் திருமகடானும் பொறாது தன்றவ்வைக்குக் காட்டி நீங்குமென்றவாறு.

வி. தௌவைமூத்தவள்-தௌவையைக்காட்டியென்பது-அறிவுடையநுண்ணனைக்காட்டென்றானென்பதுபோலவுருபுமயக்கம்-மனத்தைக்கோட்டித்தழுக்காறுடையனானானையென்றுரைப்பாருமுளர்.

பு. (ஔ-ம்) எ-இ-ள். செய்யவள்-இலக்குமியானவள், அழுக்காறுடையானை-பொறாமையுடையவனை, ஔவித்து-(தானும்) பொறாமல், தௌவையைக்காட்டிவிடும்-(தனக்கு) மூத்தவளாகியமூதேவிக்குக்காட்டிக்கொடுத்துநீங்குவாள், எ-று.

வி. செய்யவள் அழுக்காறுடையானை ஔவித்துத்தௌவையைக்காட்டிவிடும், எனக்கூட்டுக. தௌவை, மூத்தவள். தௌவையைக்காட்டி-என்பது, தௌவைக்குக் காட்டிஎன்னும்நான்காம்வேற்றுமைப்பொருளிலே,இரண்டாம்வேற்றுமையுருபுதடுமாறிவந்த, உருபுமயக்கம். உருபுமயக்கமோருருபின்பொருளொடுதன்பொருள்விடுத்துத்தலைமயங்குதலே, என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க ஔவியம் என்பது, மனக்கோட்டத்துக்குப்பெயராதலால், மனத்தைக்கோணுவித்து அழுக்காறுடையனானவனை, என்றுசொலவாருமுண்டு.

௱௬௮. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

ப. எ-து-அழுக்காறென்று சொல்லப்பட்ட வொப்பில்லாத பாவிதன்னையுடையானையிம்மைக்கட்செல்வத்தைக்கெடுத்து மறுமைக்கணரகத்துச்செலுத்திவிடுமென்றவாறு.

வி. பண்பிறந்தப்பண்பியிலலையோனுந்தனையாகினனையிருமையுங்கெடுத்தறகொடுமைபற்றியழுக்காறினைப்பாவியென்றார்-கொடியானைப்பாவியென்னுமவழக்குணமையின்-இவையாறுபாட்டானுமழுக்காறுடைமையதுகுற்றங்கூறப்பட்டது.

பு. (அ-ம்) எ-இ-ள். அழுக்காறெனவொருபாவி-பொறாமையென்றுசொல்லப்பட்ட ஒப்பில்லாதபாவியானவன், திருச்செற்று-(தன்னையுடையவனையிம்மையிலே) செல்வத்தை

க்கெடுத்து, தீயுழியுய்த்துவிடும்-(மறுமையிலே) நரகத்திற்செ லுத்திவிடுவான், எறு.

வி. பண்புக்குப்பண்பியாந்தன்மை யில்லையாறலும், த ன்னையுண்டாக்கினவனை, இருமையிலுங்கெடுக்குங்கொடுமையி ருலே, அழுக்காறாகியகுணத்தைக்குணியாகப்பாவியென்றது, எது உருவக அலங்காரமெனக்காண்க. இவையாறுபாட்டாலு ம், அழுக்காறுடைமையின்குற்றஞ்சொல்லப்பட்டது.

௱௬௯. ஔவியநெஞ்சத்தானாக்கமுஞ்செவ்வியான்
கேடுநினைக்கப்படும்.

ப. இ-து-கோட்டத்தினைப்பொருந்தியமனத்தையுடையவனாக்கமு ம்செம்மையுடையவன்கேடுமுளவாயினவையாராயப்படுமெனவாறு.

வி. கோட்டமீண்டழுக்காறு-உளவாயினென்பதெஞ்சிநின்றது-ஆக்க க்கேடுகள்கோட்டமுஞ்செம்மையுமேதுவாகவருதல்கூடாமையினறிவுடையா ரத்தேதுவாகியபழவினையாதென்றாராயப்படுதலினினைக்கப்படுமென்றார்-இம மைச்செய்தனயானறிநல்வினையும்மைப்பயன்கொலொருதனியுழந்திதிருத்த குமாமணிக்கொழுந்துடன்போந்ததெனநினைக்கப்பட்டவாறறிக.

பு. (ஔ-ம்) எ-இ-ள். ஔவியநெஞ்சத்தானாக்கமும்-பொறாமைமனமுடையவனுக்குச்செல்வமும், செவ்வியான் கேடும்-நடுவுநிலைமையுடையவனுக்குக்கேடும், (உண்டானல்) நினைக்கப்படும்-(அவையறிவுடையவராலே இவற்றிற்குக்காரண ம்யாது என்று) ஆராயப்படும், எறு.

வி. பொறாமையும், நடுவுநிலைமையுங், காரணமாக, ஆக் கக்கேடுகள்நிச்சயமாகவே உண்டாகாதென்பதுதோன்ற, அந் தஉண்டாயின, என்னுஞ்சொல்லை, இதனுட்குறைத்துவைத்தா ர். இந்த இருவகையார்க்கும், இந்த இரண்டும், ஒரோரிடத்து ப்பிறகாரணத்தால்வருமென்பார், நினைக்கப்படுமென்றார். பிற காரணமாவது, பழவினை. செவ்வியான்கேடுநினைக்கப்பட்டத ற்கு, உதாரணம்.

இம்மைச்செய்தனயானறி நல்வினை
யும்மைப்பயன்கொலொருதனியுழந்தித்
திருத்தகுமாமணிக்கொழுந்துடன்போந்த
தெனவும், பின்செய்ததீவினையாதொன்றுமில்லைப்பிறப் பதற்கு, முன்செய்ததீவினையோவிங்ஙனம்வந்தமூண்டதுவே,

எனவும், காண்க. இதனாற்பொறாமையும் றிவுநிலைமையுங்காரணமாக, ஆக்கமுங்கேடுமவாராதென்பது, சொல்லப்பட்டது.

௱௭௰. அழுக்கற்றகன்றாருமில்லையஃதில்லார்
பெருக்கத்திற்றீர்ந்தாருமில.

ப. எ-து. அழுக்காற்றைச்செய்து பெரியராயினாருமில்லை யச்செயலில்லார் பெருக்கத்தினீங்கினாருமில்லையென்றவாறு.

வி. இதனாற்கேடுமாக்கமும்வருதற்கேதுக்கூறப்பட்டது-இவையிரண்டும் போட்டாலுமையொருவருக்குக்கூறப்பட்டன.

பு. (அழு-ல்) எ-இ ள். அழுக்கற்று-பொறாமைபட்டு, அகன்றாருமில்லை-பெரியரானவருமில்லை, அஃதிலலார்-அந்தச்செயல இல்லாதவராகி, பெருக்கத்திற்றீர்ந்தாருமில-பெரியராதலிலேநின்று நீங்கினவருமில்லை, எ-று.

வி. அஃதில்லார் என்பது, முற்றெச்சம் குறிப்புமுற்றெச்சமாகவுமுளவே, என்றுஞ்சூத்திரநோக்கிக்காண்க. அழுக்காறு என்னும்பண்புப்பெயர் தொழிற்பெயராங்கால, அழுக்கறல் எனநிற்கும்.அறிலேநின்றுமுக்காலவினைமுற்றுக்கள், அழுக்கற்றான் அழுக்கறாநின்றான் அழுக்கறுப்பான் எனவருமாதலால், அழுக்கற்று என இறந்தகாலவினையெச்சம்வந்தது இதனுள்ளேமுதனிலைவினை அழுக்கறு எனநிற்றல்காண்க. இதிருலே கேடும்,ஆக்கமும், வருதற்கு,ஏதுசொல்லப்பட்டது.

௰௮. அதிகாரம்.

வெஃகாமை.

ப-ம. வெஃகாமை-அஃதாவது-பிறர்க்குரியபொருளைவெளவக்கருதாமை-பிறருடைமை கண்டவழிப்பொறாமையேயன்றியதனைத்தான்வெளவக்கருதுதலுங்குற்றமென்றற்கிஃதழுக்காறாமையின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (வெஃ-மை) அதாவது-(பிறர்க்கு உரியபொருளை யநியாயத்தாற்கைக்கொள்ள) விரும்பாமையைச்சொலவது. பிறருடைமைகண்டபோதுபொறாமைப்ப தலேயன்றிய தனைக்கைக்கொள்ளவிரும்புதலுங்குற்றமென்பதற்கு, இதைய ழுக்காறாமையின்பின்வைக்கப்பட்டது.

௱௭௧. நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கேதரும்.

ப. இ-து-பிறர்க்குரியனகோடன்மக்கற்றன்றென்று நடுவுநிலைமையின்றியவாற்றன்பொருளையொருவன் வெஃகுமாயின் அவ்வெஃகுதலவன்குடியைக்கெடச்செய்துபலகுற்றங்களையுமப்பொழுதேயவனுக்குக்கொடுக்குமென்றவாறு.

வி. குடியைவளரச்செய்துபலநன்மையும்பயக்குமியல்புபற்றிவெஃகின்னென்பார்-நன்பொருள்வெஃகினென்றார்-பொன்றவென்பதுபொன்றியெனத்திரிந்துநின்றது-செய்தென்பது-சொல்லெச்சம்.

பு. (நடு-ம்) எ-இ-ள். நடுவின்றி-(பிறர்க்கு உரியனவற்றைக்கைக்கொள்ளவிரும்புவதுநமக்குத்தரும அன்றென்னும்)நடுவுநிலைமையில்லாமல்.நன்பொருள்வெஃகின்-(பிறருடைய) நற்பொருளை (ஒருவன்) விரும்புவானுனால், (அந்தவிருப்பமானது) குடிபொன்றி-(அவன்) குடியைக்கெடச், (செய்து) குற்றமும்-(பல) குற்றங்களையும், ஆங்கேதரும்-அப்பொழுதே (அவனுக்குக்) கொடுக்கும். எ-று.

வி. வெஃகின் என்றுசொல்லவந்தவர், அப்பொருள்குடியைவளரச்செய்துபலநன்மைகளையுந்தருமாதலால, அதுபற்றி, நன்பொருள்வெஃகினென்றார். பொன்றவென்பது, பொன்றியெனத்திரிந்துநின்றது. அப்படித்திரிந்துநின்றாலும், பொருள்மாறுபடாது என்பதை, சொற்றிரியினும்பொருடிரியாவினைக்குறை, என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. செய்து-என்பது, சொல்லெச்சமாய்க்குறைந்துநின்றது.

௱௭௨. படுபயன்வெஃகிப்பழிப்படுவசெய்யார்
நடுவன்மைநாணுபவர்.

ப. இ-து-பிறர்பொருளைவௌவினாற்றமக்குவரும்பயனைவிரும்பியதுவௌவுதற்குப்பழியினகண்ணேபடுஞ்செயல்களைச்செய்யார் நடுவுநிலைமையன்மையையஞ்சுவாரென்றவாறு.

வி. நடுவு-ஒருவன்பொருட்குப்பிறனுரியனல்லனென்னு நடுவு.

பு. (படு-ர்) எ-இ-ள்.படுபயன்வெஃகி-(பிறர்பொருளைக்கொண்டதினாலேதமக்கு) வரும் பிரயோசனத்தைவிரும்பி, (அதைக்கைக்கொளற்கு) பழிப்படுவசெய்யார்-நிந்தையொடுபடுகின்ற செயல்களைச்செய்யமாட்டார், நடுவன்மை-நடுவுநிலைமையல்லாததற்கு, நாணுபவர்-(அஞ்சிக்) கூசுபவர், எ-று.

வி. நடுவுநிலைமை, ஒருவனுடையபொருளுக்குப்பிறனுரியவனல்லன், என்னும்நீதி.

௱எ௩. சிற்றின்பம்வெஃகியறனல்லசெய்யாரே
மற்றின்பம்வேண்டுபவர்.

ப. எ-து- நிலைபெறாதபாவமெனவியபொருளாற்றுமெய்யத்தநிலையில்லாதவின்பத்தை விரும்பியகாமாட்டதனல்லாதசெயல்களைச்செய்யாரறத்தானவருநிலையுடையவின்பத்தைக்காதலிப்பாரென்றவாறு.

வி. பாவத்தானவருதலின்பபொழுதேயழியுமெனபாசிற்றின்பமெனறூர்-மறுமையின்பமெனபது மற்றின்பமென நின்றது.

பு. (சிற்-ர்) எ-இ-ன். மற்றின்பம்வேண்டுபவர்-(தருமத்திஞலேவருவதாகிய) பேரின்பத்தைவிரும்புபவர், சிற்றின்பம்வெஃகி-(பிறர்பொருளைக்கொண்டதிஞலே தாங்களடைவதாகிய) சிறிய இன்பத்தைவிரும்பி அறனல்லசெய்யார்-(அவரிடத்திலே) தருமம் அல்லாதசெயல்களைச்செய்யமாட்டார், எறு.

வி. பாவத்திஞலேவருதலால், அப்பொழுதே அழியுமென்றுசொல்லவந்தவர், சிற்றின்பமென்றூர். சிறுமைக்கு எதிராயிப்பிறிதாகிய துபெருமையாதலால், விரைந்து அழிதலுமின்றிநீடித்து அழிதலுமாகிய ஐம்புல இன்பங்களை இங்கேசிற்றின்பம்பேரின்பமென்றூர். காமமோக்க இன்பங்களையன்றெனவுணர்க. மற்று என்னும் இடைச்சொல், இங்கேயினமாகியபிறிது என்னும்பொருள்படநின்றது. வினைமாற்றசைநிலைபிறிதெனுமற்றே, என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க.

௱எ௪. இலமென்றுவெஃகுதல்செய்யார்புலம்வென்ற
புன்மையில்காட்சியவர்.

ப. எ-து-யாமவறியமென றுகருதிய துநோக்கிறபொருட்டுபிறர்பொருளை விரும்புதலசெய்யாரைம்புலன்களையும்வென்றகுற்றமில்லாதகாட்சியினையுடையாரென்றவாறு.

வி. வெல்லுதல்பாவநெறிக்கட்செல்லவிடாமை-புலம்வென்றபுன்மையில்காட்சியவராகவே துன்பமின்மையின்வெஃகுதலையுமில்லையாயிற்று-புன்மையில்காட்சிபொருள்களைத்திரிபின்றியுணர்தல்.

பு. (இல-ர்) எ-இ-ன். புலம்வென்ற-ஐம்புலன்களையுஞ்செயித்த, புன்மையில்-குற்றமில்லாத, காட்சியவர்-உணர்வை

புடையவர், இலமென்று-(நாம்) தரித்திரமுடையமாமென்மென்றுநினைத்து, (அதுநீங்கும்படியாக) வெஃகுதல்செய்யார்-(பிறர்பொருளை)விரும்புவதைச்செய்யார், (விரும்பார்,) எ-று.

வி. வெல்லுதலாவது, புலன்களைப்பாவவழியிலேபோகவிடாதிருப்பது. புலம்வென்றபுன்மையில்காட்சியவர்க்கு,வறுமையில்லாததினாலேவெஃகுதலுமில்லையாயிற்று. புன்மையில்காட்சி, பொருள்களை, மாறுபாடில்லாமல-உணர்வது. இனி-வென்ற என்னும்பெயரெச்சம்-காட்சியவர் என்னும்பெயர்கொண்டுமுடியவேண்டுதலாலே புன்மையென, இடைப்பிறவரலவென்றபுன்மையெனப்பொருள்படுதலால் அதுபொருந்தாது என்பதை-உருபுமூற்றீரெச்சங்கொள்ளுமபெயர்வினையிடைப்பிறவரலுமாமேற்பன. என்றுஞ்சூத்திரநோக்கிபுணர்ந்து-புலம்வென்றபுன்மை-என்பதற்கு, ஐம்புலன்களாணவை வென்ற (வென்றியாகிய) புன்றொழிலானது, இல-(தமயிடத்து) இல்லாத, காட்சியவர்-அறிவுடையவர், எனப்பொருள்கொண்டு-அறிவிலாதவரைவென்ற ஐம்புலப்புன்மைபுணராத அறிவுடையவர், என எழுவாயாக்கி-இலமென்றுவெஃகுதல் செய்யார், எனப்பயனிலைகூட்டிமுடிக்கப்பொருந்தும எனக் காண்க வெல்லப்பட்டவர் அறிவிலராதலாலும, அந்த அறிவிலருள்ளும்-ஒருவனைஐம்புலன்களுங்கூடிவென்றதனாலும், வென்றவென்றியை, வென்றபுன்மையென்றார். ஆதலால, இது தொழிலகொண்டுமுடிந்த பெயரெச்சம். புன்மை, இங்கே தொழிலின்மேலநின்றது. வென்ற(வெல்லுதற்றொழிலாகிய) புன்றொழில, எனவிரியும். காட்சி, அறிவு.

௱எரு. அஃகியகன்றவறிவென்னாம்யார்மாட்டும்
வெஃகிவெறியசெயின்.

ப. ஏது-நுண்ணிதாயெல்லா நூல்களினுஞ்சென்றதமதறிவென்னபயத்ததாம்பொருளைவிரும்பியாவர்மாட்டுமறிவொடுபடாதசெயல்களையறிவுடையார்செய்வாராயின்னறவாறு.

வி. யார்மாட்டுமெவறியசெயின்--தக்கார்மாட்டுந்தகாதார்மாட்டும்பிழைத்தனவுங்கடியனவுமுதலியசெய்தல்--அறிவிறந்தபயனிலைசெய்யாமையாக வன்று வென்றுமென்றார.

பு. (அஃ-ன்) எ-இ-ள். வெஃகி-(பொருளை) விரும்பி, யார்மாட்டும்-யாவரிடத்தும், வெறிய-மயக்கத்தொடு கூடிய செயல்களை, செயின்-(அறிவுடையார்)செய்வாராகில், அஃகி-நுட்பமாகி, அகன்ற-(எல்லாநூல்களிலுஞ் சென்று) விரிந்த, அறிவென்னும்-(தம்முடைய) அறிவானது என்ன (பிரயோசனத்தையுடையது) ஆகும், எ-று.

வி. யார்மாட்டும்வெறியசெயலாவது, மேல்மக்களிடத்தும் கீழ்மக்களிடத்தும் இழிவானவையும்கோபிக்கப்படுபவையு முதலானவைகளைச்செய்தல அறிவுக்குப்பயன், அவைசெய்யாதிருப்பதாதலால், அஃகியகன்றவறிவென்னென்றார்.

௱எ௬. அருள்வெஃகியாற்றின்கணின்றான்பொருள்வெஃகிப்
பொல்லாதசூழக்கெடும்.

ப. அது - அருளாகியவறத்தைவிரும்பியதற்குவழியாகியவில்லறத்தின்கணின்றவன் பிறர்பொருளையவாவியதனைவருவிக்குநெறிகளையெண்ணக் கெடுமென்றவாறு.

வி. இல்லறநெறியாலறிவுமுதிர்ந்தன்றித்துறக்கப்படாமையினதனைத் துறவறத்திற்காறென்றார்-கெடுதல் இருமையுஞ்சேரவிழத்தல்-சூழ்ந்ததுணையானேகெடுமெனவேசெய்தாற்கெடுதல்சொல்லாமையேபெறப்பட்டது.

பு. (அரு-ம்) எ-இ-ள். அருள்வெஃகி-கருணை(யாகிய துறவறத்தை) விரும்பி, ஆற்றின்கணின்றான்-(அதுபெறுதற்கு) வழி (யாகிய இல்லறத்திலே) நின்றவன், பொருள்வெஃகி-(பிறர்) பொருளைவிரும்பி, (அதைக்கொள்ளும்பொருட்டு) பொல்லாத-பொல்லாதவழிகளை, சூழ-ஆலோசனைசெய்ய, கெடும்-கெடுவான், எ-று.

வி. இல்லறநெறியிலேநின்று அறிவுமுதிர்ந்தாலல்லது, துறவறத்தைக்கைக்கொள்ளப்படாததினாலே, அதைத்துறவறத்துக்கு, ஆறு என்றார். கெடுதல்-இரண்டுதருமங்களையுமுடிய இழப்பது. ஆலோசனைசெய்தமாத்திரமேகெடுவான் எனவே, செய்தாற்கெடுவது, சொல்லவேண்டாதாயிற்று. இனி, அருள் வெஃகியாற்றின்கணின்றான் என்பதற்குத் (தன்னைப்பாவத்திலேநின்றுநீக்கிப்பிறவித்துன்பத்தைப்போக்கிப் பாதுகாத்தளித்தற்கு உரியகடவுளின்) கருணையைவிரும்பி அதைப்பெறு

தற்கு-வழியாகிய இல்லறத்திலேநின்றவன், எனப்பொருள் கொளினது சிறப்புடைத்து. என்னெனின், குடிசெய்வலென்னுமொருவற்குத்தெய்வ மடிதற்றுத்தான்முந்துறும் எனஇவர்தாமேபிற்கூறுதலாலே. குடிசெய்வது அக்கடவுளருள்பெறுதற்குவழியென்பதுதுணிவு, ஆதலால், எனக்காண்க.

௱எஎ. வேண்டற்கவெஃகியாமாக்கம்விளைவயின்
மாண்டற்கரிதாம்பயன்.

ப. ஏது-பிறர்பொருளைவௌவிக்கொண்டதனாலாகின்றவாக்கத்தை விரும்பாதொழிக; பின்னனுபவிக்குங்காலத்து அதன்பயன் நன்றாதலில்லையாதலான் என்றவாறு.

வி. விளைவென்பது முதனிலைத்தொழிற்பெயர்- இவையேழுபாட்டானும் வெஃகுதலின் குற்றம் கூறப்பட்டது.

பு. (வேண்) எ-இ-ள் பயன்விளைவயின்-(அநுபவிக்கும்படியாக) பயன்படுங்காலத்து, மாண்டற்கு-மாட்சிமைப்படுதற்கு. (நன்றாதற்கு) அரிதாம்-அரியதாம, (இலலையாம்) (ஏதாதற்கு உாதாம,ஆதலால)வெஃகி-(பிறர்பொருள) விருமபி,-(கொள்ளப்படுவதாலே) ஆம ஆகும், ஆக்கம்-செலவப்பெருக்கத்தை, வேண்டற்க-விரும்பாதிருக்க, எ-று.

வி. விளைவயின்-என்பது,விளைத்தொகைத்தொடர்மொழி. அது விளையின்பெருகுகாலத்தியலு மென்னுஞ்சூத்திரம் நோக்கிக்காண்க. அதுமுக்காலத்திலுஞ்செலலுமாயினும், இங்கே எதிர்காலநோக்கி, நின்றது. பயன் என்னும் எழுவாய், விளா என்னுமமுதனிலைவினைகொண்டது. இந்த ஆக்கமானது பின்பு இன்பம் பயவாது துனபமேபயத்தலினிதனைவிரும்பியேர் நிச்சயமாகவேகெடுவரென்பதற்கு இரங்கி, ஏதுவுங்காட்டியதனாலேவேண்டற்கவெனவிலக்கினார் இது,ஏதுவிலக்கென்னும் அலங்காரத்தின்பாற்படும். இவையேழுபாட்டாலும் ஆசைப்படுதலின்குற்றஞ்சொலலப்பட்டது.

௱எஅ. அஃகாமைசெல்வத்திற்கியாதெனின்வெஃகாமை
வேண்டும்பிறன்கைப்பொருள்.

ப. ஏது-சுருங்கன்மாலைத்தாகியசெல்வத்திற்குச்சுருங்காமைக்காரணம் யாதென்றொருவனாராயின் அதுபிறன்வேண்டுங்கைப்பொருளைத்தான்வேண்டாமையாமென்றவாறு.

வி. அஃகாமையாகுபெயர் - வெஃகாதானசெல்வமஃகாதெனபதாயிற்று.

பு. (அஃ-ள்) எ-இ-ள். செல்வத்திற்கு-(சுருங்கும் ஒழுங்குடையதாகிய) ஐசுவரியத்துக்கு, அஃகாமை-சுருங்காமைக்; (காரணம்) யாதெனின்-எது என்று (ஒருவன்) ஆராய்வானானல், (அது) வேண்டும்பிறன்கைப்பொருள்-பிறன் விரும்பப்படுங்கைப்பொருளை, வெஃகாமை-(தான்) விரும்பாதிருத்தலாம், எ-று.

வி. அஃகாமை, ஆகுபெயர். பிறர்பொருளைவிரும்பாதவன்செல்வஞ்சுருங்காதென்பது, கருத்து. இனியிதற்குவேறோர்முடிபு.

அஃகாமைசெல்வத்திற்கு - செல்வத்திற்குச்சுருங்காதிருக்குந்தன்மை, யாதெனின் - யாதாலமையுமென்று (ஒருவன்) வினவினானயின், (அதற்கு) வேண்டும்பிறன்கைப்பொருள் - பிறன்விரும்புங்கைப்பொருளை, வெஃகாமை-விரும்பாதிருக்குந்தன்மை (யாலமையுமென்றுத்தரம்,) எ-று.

இதற்கு-வி. யாதென்னுமிடத்தும், வெஃகாமையென்னுமிடத்தும், மூன்றும்வேற்றுமையுருபும், அதன் பொருளும், தொக்குநின்றன. யாதெனின் என்றதனால், ஒருவன் வினவினானயின் என்பதும், அதற்கு உத்தரம் என்பதும்; வருவிக்கப்பட்டன.

௱எகூ. அறனறிந்துவெஃகாவறிவுடையார்ச்சேருந்
திறனறிந்தாங்கேதிரு.

ப. எ-து-இஃதறனென்றறிந்து பிறர்பொருளைவிரும்பாதவறிவுடையாரைத் திருமகடானவரைடைதற்காகக்கூறுந்திறனையறிந்தக்கூறேசென்றடையுமென்றவாறு.

வி. அடைதற்காகக்காலமுமிடனுஞ்செவ்வியுமுதலாயின-இவையிரண்டோட்டானும்வெஃகாமையின்குணங்கூறப்பட்டது.

பு. (அற-று) எ-இ-ள். அறனறிந்து-(இது) தருமமென்றுதெரிந்து, வெஃகா-(பிறர்பொருளை) விரும்பாத, அறிவுடையார்-ஞானமுடையவரை, திரு-இலக்குமியானவள், திறன

றிந்து (அடைவதற்கு ஏற்ற) கூறுபாடு அறிந்து, (வகையறிந்து) அங்கே-அறிவுடையோரிடத்தே, சேரும்-சேருவாள், எ-று.

வி. அடைதற்கேற்றகூறுபாடு, காலம், இடம், சமையம், முதலானவை. இவ்விரண்டுபாட்டாலும், விரும்பாமையின் குணங்கூறப்பட்டது.

௱அ௰. இறலீனுமெண்ணாதுவெஃகின்விறலீனும்
வேண்டாமையென்னுஞ்செருக்கு

ப. இ-து-பின்விளைவதறியாதொருவன்பிறன்பொருளை வெளவக்கருதின் அக்கருத்தவனுக்கிறுதியைப்பயக்கும் அப்பொருளைவேண்டாமையென்னுஞ்செல்வம் வெற்றியைப்பயக்குமென்றவாறு.

வி. பகையும்பாவமும்பெருகலின் இறலீனுமென்றும், அப்பொருளைவேண்டியழுவோரியாவரையுங்கீழ்ப்படுத்தலின் விறலீனுமென்றுங்கூறினார். செருக்கு காரணப்பெயர்-இதனால் இருமையுமொருங்குகூறப்பட்டன.

பு. (இ-கு) எ-இ-ள். எண்ணாதுவெஃகின்-(பின்னுண்டாவதை)எண்ணிப்பாராமல்(பிறன்பொருளைக்கைக்கொள்ள) விரும்புவானால், (அந்தவிருப்பமானது அவனுக்கு) இறலீனும்-(மரணத்துக்கேதுவாகிய) கெடுதியைத்தரும், வேண்டாமையென்னுஞ்செருக்கு-(அப்பொருளை)விரும்பாதிருப்பது என்கின்றமனக்களிப்பானது, விறலீனும்-(வெற்றிக்கு ஏதுவாகிய) பெருமையைத்தரும், எ-று.

வி. பழியும்பாவமும் உயர்ந்துதரித்திரமேலிடுதலாலே, மரணத்திற்கு ஏதுவென்பதும்; தருமம் உயர்ந்துசெல்வம் பெருகுதலாலே, வெற்றிக்கேதுவென்பதும், வருவிக்கப்பட்டன. பிறன்பொருளைவிரும்பாதிருக்கவே, தருமம் உயரும். உயரவே, செல்வம்பெருகும். பெருகவே, மனக்களிப்பு உண்டாவது நிச்சயம். ஆதலால், வேண்டாமையென்னுஞ்செருக்கெனக்காரியத்தைக்காரணமாக உபசரித்தார். இறல், கேடு. விறல், பெருமை. செருக்கு, மனக்களிப்பு. இதனாலே, வெஃகுதல்வெஃகாமைகளின்குற்றமுங்குணமுஞ்சொல்லப்பட்டன.

௧௯. அதிகாரம்.

புறங்கூறாமை.

ப-ம். புறங்கூறாமை-அஃதாவது-காணாதவிடத்துப்பிறரையிகழ்ந்துரையாமை—மொழிக்குற்றமனக்குற்றமடியாகவருதலானிஃதழுக்காறாமை யெஃகாமைகளின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (புற-மை) அதாவது-காணாத இடத்துப்பிறரையிகழ்ந்துசொல்லாதிருப்பதைச்சொல்வது. சொற்குற்றமானது மனக்குற்றங்காரணமாகவருமாதலால் இதுமனக்குற்றமாகிய அழுக்காறுவெஃகுதல்களையெதிர்மறுத்துரைத்த அழுக்காறாமைவெஃகாமைகளின்பின்வைக்கப்பட்டது.

௱௮௧. அறங்கூறானல்லசெயினுமொருவன்
புறங்கூறானென்றலினிது.

ப. எ-து-ஒருவனறனென்றுசொல்லுவதுஞ்செய்யாதுபாவங்களைச்செய்யுமாயினும்பிறனைப்புறங்கூறானென்றுலகத்தாராற்சொல்லப்படுதனன்றென்றவாறு.

வி. புறங்கூறாமைஅறத்துறைகளானிழிக்கப்பட்டதுமேற்பட்டுத்தோன்றுமென்பதாமித்திருக்குறளிலறத்தினதுநன்மைகூறப்பட்டது.

பு. (அற-து) எ-இ-ள். ஒருவன்அறங்கூறான்-ஒருவன் தருமத்தை (வாயினாலே) சொல்லாதவனாகி. அல்லசெயினும்-பாவங்களைச்செய்வானானாலும், புறங்கூறானென்றலினிது-(பிறனைப்,)புறங்கூறானென்று(உலகத்தாராலே) சொல்லப்படுவது இன்பமுடைத்தாம், எ-று.

வி. அறங்கூறானென்பது, அறங்கூறானாகியென, முற்றுவினையெச்சவினையாய் நின்றது கொடும்பாவியாயினுமென்றுசொல்லவந்தவர், அறங்கூறானல்லசெயினுமென்றும், இப்புறங்கூறாமையென்னுந்தருமத்தைக்கைக்கொள்வதுமற்றத்தருமங்களைக்கைக்கொள்வதிலுமிகவும்அருமையென்றுசொல்லவந்தவர், புறங்கூறானென்றல் இனிதென்றுஞ்சொன்னார். புறங்கூறாமை, யெல்லாக்குற்றங்களையுங்கீழ்ப்படுத்துமென்பது, கருத்து.

௱௮௨. அறனழீஇயல்லவைசெய்தலிற்றீதே
புறனழீஇப்பொய்த்துநகை.

ப. எ-து-அறமென்பதொன்றில்லையெனவழித்துச்சொல்லியதன்மேற் பாவங்களைச்செய்தலினுந்தீமையுடைத்தொருவனைக்காணாவழியிகழ்ந்துரை யாலழீஇத்துச்சொல்லிக்கண்டவழியவனொடுபொய்யாகநகுதலென்றவாறு.

வி. உம்மைச்சிறப்பினிமையாகக்கொள்க-அழித்தலெளிமையைக்கோறல.

பு. (அற-கை) எ-இ-ள். அறனழீஇ-தருமமென்பதை (இல்லையென்று)கெடுத்துப்பேசி, (அதன்மேல)அல்லவைசெய்தலின்-பாவங்களைச்செய்வதினும், தீதே-தீமையுடையதே, புறனழீஇ-(ஒருவனைக்) காணாதஇடத்தில் (இகழ்ந்துபேசி அவன்புகழைக்) கெடுத்து, பொய்த்துநகை-(கண்ட இடத்தில் அவனோடு) பொய்யாய்நகைத்தல், எ-று.

வி. இன் உருபு, காட்டிலும் என்னும் உறழ்ச்சிப்பொருள்படநின்றது. இது, முறை நிரனிறைப்பொருள்கோள். அழி என்னுமுதனிலைவினை, அழீஇஎன, அழித்து என்னும்வினையெச்சச்சொல்லினிசைநிரப்புதற்பொருட்டுநீண்டு அளபெடுத்துநின்றது. அழித்து என்றது, இங்கேசொல்லிநிலேயாதலால், அழித்துப்பேசியென்பதுபெறப்பட்டது. ஒழிந்தஇசையெச்சச்சொல்லெச்சங்கள், வருவித்துரைக்கப்பட்டனவாண்க.

௱௮௩. புறங்கூறிப்பொய்த்துயிர்வாழ்தலிற்சாத
லறங்கூறுமாக்கந்தரும்.

ப. எ-து-பிறனைக்காணாவழியிகழ்ந்துரைத்துக்கண்டவழியவற்கினியனாகப்பொய்த்தொருவனுயிர்வாழ்தலினதுசெய்யாதுசாதலவனுக்கறநூல்கள் சொல்லுமாக்கத்தைக்கொடுக்குமென்றவாறு.

வி. பின்புறங்கூறிப்பொய்த்தல ஒழிதலிற்சாதலாக்கந்தருமென்றார்-ஆக்கமஃதொழிந்தார்மறுமைக்கணெய்தும்பயன் - அறமஆகுபெயர்-தருமெனப்படிவழுவமைதி

பு. (புற-ம்) எ-இ-ள். புறங்கூறி-(ஒருவனைக்) காணாதஇடத்தில் (இகழ்ந்து) பேசி, பொய்த்துயிர்வாழ்தலின்-(கண்டஇடத்தில் அவனுக்கு இனியவனாகப்) பொய்யாய் (ஒருவன்) உயிர்வாழ்வதினும், சாதல்-(அப்படிச்செய்யாமல்) இறந்துபோவது, (அவனுக்கு) அறங்கூறும்-தருமநூல்கள்சொல்லப்பட்ட, ஆக்கந்தரும்-செல்வத்தைத்தரும், எ-று.

வி. பின், புறங்கூறிப்பொய்ப்பது ஒழிதலாலே, சாதல், ஆக்கந்தரும் என்றார். ஆக்கமாவது, புறங்கூறுநிறந்தார்மறுமையிலே அடையுஞ்செல்வம். அறம் என்றது, அறநூலையாதலால், ஆகுபெயர். அவனுக்குக்கொடுக்கும் என்னாமல், தரும் என்றது, இடவழுவமைதி. வழுவமைதி என்பது என்னெனின், இலக்கணநூல்கள்சொல்லப்படுவனவெல்லாம்- இலக்கணமும், வழுவும், வழுவமைதியும், எனமூன்றுவகைப்படும். அவற்றுள், குற்றமில்லாமலிருப்பது, இலக்கணம். வழுவுஎன்பது, குற்றம். வழுவமைதி என்பது, குற்றமாயினுமிது இருக்கலாமென்று அமைத்துக்கொள்ளப்படுவது.

௱௮௪. கண்ணின்றுகண்ணறச்சொல்லினுஞ்சொல்லற்க
முன்னின்றுபின்னோக்காச்சொல்.

ப. எ-து-ஒருவனெதிரேநின்றுகண்ணோட்டமறச்சொன்னாலுமவனெதிரினின்றிப்பின்வருங்குற்றத்தைநோக்காதசொல்லைச்சொல்லாதொழிகவென்றவாறு.

வி. பின்னாகுபெயர்-சொல்லுவானொழில்சொன்மேலேற்றப்பட்டது- இவைமூன்றுபாட்டானும்புறங்கூறலின்கொடுமைகூறப்பட்டது.

பு. (கண்-ல்) எ-இ-ள். கண்ணின்று-(ஒருவனைக்) கண்ணெதிரேநின்று, கண்ணறச்சொல்லினும்-கண்ணோட்டமறப் பேசினாலும் (தாட்சணியங்கெடப்பேசினாலும்,) முன்னின்று-(அவன்) எதிரேயில்லாமல், பின்நோக்காச்சொல், பின்(வருங்குற்றத்தை) நோக்காதசொல்லை, சொல்லற்க-சொல்லாதொழிக, எ-று.

வி. பின்வருங்குற்றத்தைப்பின் என்றது, ஆகுபெயர். நோக்காதவன்சொல்லுந்தொழிலை, நோக்காச்சொல்லெனச் சொல்லின்மேலேற்றப்பட்டது. இவைமூன்றுபாட்டானும், புறங்கூறுதலின்கொடுமைசொல்லப்பட்டது.

௱௮௫. அறஞ்சொல்லுநெஞ்சத்தானன்மைபுறஞ்சொல்லும்
புன்மையாற்காணப்படும்.

ப. எ-து-புறஞ்சொல்லுவாரொருவனறனைநன்றென்றுசொல்லினுமுள்ளத்தானன்றாயச்சொல்லுகின்றானல்லனென்பதனையவன்புறஞ்சொல்லுதற்குக்காரணமாகியமனப்புன்மையானேயறியப்படுமென்றவாறு.

வி. மனத்தீதாகலின்சொற்கொள்ளப்படாதென்பதாம்.

பு. (அற-ம்) எ-இ-ள். அறஞ்சொல்லு நெஞ்சத்தானன்மை-(புறங்கூறுவான் ஒருவன் தருமத்தைநன்றென்றுசொன்னாலும்) அதை(நல்ல) மனமுடையவனாகிச்சொல்லுகின்றான் அல்லனென்பதை, புறஞ்சொல்லும்புன்மையாற்காணப்படும். (அவன்) புறங்கூறுதற்குக் (காரணமாகியமனக்) குற்றத்தினாலேகண்டுகொள்ளப்படும், எ-று.

வி. மனத்தீங்கு உடையது ஆதலால், அந்தச்சொல்லைக் கொள்ளப்படாதென்பதாம், இனி, அறஞ்சொல்லும்வாயான் என்னாது, அறஞ்சொல்லுநெஞ்சத்தான் என்றதனால், அந்த அறம்நெஞ்சத்தொடுபட்டது எனக்கொண்டு, பின்பு, அன்மையென்றதனால், நெஞ்சத்தொடுபட்டறத்தைச்சொல்லுவானல்லனாந்தன்மை, எனவருதலால், அறஞ்சொல்லுநெஞ்சத்தானன்மை, என்பதற்கு, அறத்தையுடன்பட்டுச்சொல்லுமனத்தையுடையவன் அல்லனாந்தன்மையை, எனப்பொருளுரைத்து, புறஞ்சொல்லும்புன்மையாற் காணப்படுமென்முடிப்பினது சிறந்துகாட்டியதுபோலும்.

௱௮௬. பிறன்பழிகூறுவான்றன்பழியுள்ளுந்
திறந்தெரிந்துகூறப்படும்.

ப. எ-து - பிறனொருவனபழியையவனபுறததுககூறுமவனறனபழிபலவறறுளளுமுளளயுநதிறமுடையவறறைததெரிநதவனாறகூறபபடுமெனறவாறு.

வி. புறததெனபததிகாரததாறபெறறும-இதுவருகினறவறறிறகுமொககும-திறமாகுபெயா - தனனைபபுறஙகூறியவாறுகேட்டானகூறியாறகவவனறியவனறிறததுபபட்டுளளயுநதிறததனவாகியபழிகளைநாடியெதிரேகூறுமாகலிறறிறநதெரிநதுகூறபபடுமெனறா.

பு. (பிற-ம்) எ-இ-ள். பிறன்பழிகூறுவான்-பிறனொருவனுடையபழியை (யவன்புறத்திலே) சொல்பவன், தன்பழியுள்ளும்-தன்னுடையபழிகள்பலவற்றுள்ளும், திறம்-(வருத்தப்படுத்துங்குணக்)கூறுஉடையபழிகளை, தெரிந்து-ஆராய்ந்து (எடுத்து,) கூறப்படும்-(அவனாலே) சொல்லப்படுவான், எ-று.

வி. கூறுவானென்ற இடத்திலே, புறத்து என்பது. அதிகாரத்தாற்பெறப்பட்டது. இதுமேலே வருபவைகளுக்கும்

ருத்திருக்கும். திறம் என்பது, திறத்தையுடையபழிகளைக்குறித்து நின்றதாலே, பண்பு ஆகுபெயர். தன்னைப்புறங்கூறியதைக்கேட்டவன் அந்தப்புறங்கூறினவனுக்கு அந்தக்கூறிய அம்மாத்திரந்தானேயல்லாமல், அவன்பாற்பட்டுவருத்தப்படுத்துங்குணங்களையுடையபழிகளை ஆராய்ந்தெடுத்து அவனெதிரேசொல்லுவானாதலாலே, திறந்தெரிந்துகூறப்படுமென்றார்.

இனி இதற்குவேறுரை — பிறன்பழிகூறுவான்-வேறொருவனுடையபழியை(அவன்புறத்திலே) சொல்பவன், தன்பழி-(இப்புறங்கூறுதலாகிய) தன்னுடையநிந்தையை, உள்ளுந்திறம்-(மேன்மக்கள்)நினைக்குந்தன்மையை, தெரிந்து-(சான்றோராலே)தெரிந்துகொண்டபின், கூறப்படும்-சொல்லக்கடவது, எறு.

இதற்கு-வி. இங்கேகூறப்படுமென்றது செயப்பாட்டுவினையன்று, கூறவேண்டும் என்றதுபோலஉம்மீற்றுவியங்கோள்முற்றுவினை. கூறுக-எனின் அமையும்-கூறவேண்டும்; கூறப்படும், எனச்சொல்வது, சொற்பொருள்விரித்தலென்னும் உத்தி. உண்டுவருவான்-என்றால், உண்டபின்வருவான் எனப்பெயரெச்சப்பொருள்படுதல்போலத்தெரிந்து என்னும்வினையெச்சம், தெரிந்தபின் எனநின்றுகூறப்படுமென்பதனொடுமுடிந்தது. தெரிந்தபின், தன்பழியேஉயர்ந்துகாணப்படுமாதலாலே, பிறன்பழிகூறவேகூறானென்பதுநிச்சயமாதலாலதுபற்றித்தெரிந்துகூறப்படுமென்றார் எனக்கொள்க. இன்னுங்கூறப்படுமென்பதற்கு இவ்வாறன்றிக், கூறுதல்கூறப்படுதல்என்னுஞ் செய்வினைசெயப்பாட்டுவினையிரண்டினுள்ளும், தெரிந்தபின், இவனுக்குப்புறங்கூறுதலாகிய செய்வினையொழிதலாற்கூறப்படுமென்றார். இது, நீயிர்பெரிதுமறிதிர், என்பதுபோலக்குறிப்புப்பொருள்படநின்றது. என்னை, புறங்கூறாதவன், அறங்கூறானல்லசெயினும் அவைபற்றிஇகழப்படானாதலாலச்செயப்பாட்டுவினையுமில்லையென்பது தோன்றநின்றமையின் எனவுங்கொள்க.

௱௮௭. பகச்சொல்லிக் கேளிர்ப்பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடறேற்றாதவர்.

ப. எ-து- தம்மைவிட்டு நீங்குமாறு புறங்கூறித் தங்கேளிரையும் பிரியப்பண்ணுவார் கூடிமகிழுமாறு இனியசொற்களைச் சொல்லி அயலாரோடு நட்பாடுதலையறியாதாரென்றவாறு.

வி. சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது- கேளிரையும்பிரிப்பரென்றதனானயலாரோடுமென்பதுவருவிக்கப்பட்டது- அறிதல் தமக்குறுதியென்றறிதல்- கடியுமிடத்தேதேற்றான் சோர்தன்கையெழுபிபோலத் தேற்றாமைதன்வினையாய்நின்றது- புறங்கூறுவார்க்கியாவரும்பகையாவரென்பது கருத்து.

பு. (பக-ர்) எ-இ-ள். நகச்சொல்லி-மகிழ்ச்சியுண்டாகும்படி (இன்சொற்களைப்) பேசி, நட்பாடல்-(அயலவருடனே) சிநேகஞ்செய்வதை, தேற்றாதவர்-அறியாதவர். பகச்சொல்லி-(தம்மைவிட்டுப்) பிரியும்படியாகப் (புறங்) கூறி, கேளிர்ப்பிரிப்பர்-சுற்றத்தாரையும்பிரியப்பண்ணுவர், எ-று.

வி. கேளிரையும், என்கின்ற உயர்வுசிறப்பு உம்மைதொக்குநின்றது. கேளிரையும்பிரிப்பரென்றதனாலே, அயலாரொடு என்பது, வருவிக்கப்பட்டது. அறிதல், தமக்குநன்மையென்றறிதல். தேற்றாதவர் என்பது, அறியாதவர், அறிவியாதவர், எனத்தன்வினைபிறவினையிரண்டினும்வரும். இங்கேயது, தன்வினையாய்நின்றது. தன்வினைபிறவினையென்பதென்னவெனின், நடந்தான்என்றால், நடத்தலைச்செய்தான் எனப்பகுதிவினைப்பொருளைவிகுதிதன்னுள் அடக்கிநிற்பது, தன்வினை. நடப்பித்தான் என்றால், நடக்கும்படியாகத்தானொருவினையைச்செய்தான் எனப்பகுதிவினைப்பொருளையொழித்து வேறுவினையைவிகுதியுள்ளடக்கிநிற்பது, பிறவினை. அதுசெய்யென்வினைவழியென் னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. புறங்கூறுவார்க்கு எல்லாரும்பகையாவரென்பது, கருத்து.

௱௮௮. துன்னியார்குற்றமுந் தூற்றுமரபினா
ரென்னைகொலேதிலார்மாட்டு.

ப. எ-து- தம்மொடுசெறிந்தார் குற்றத்தையும் அவர்புறத்துத் தூற்றுமியல்பினையுடையார் அயலார்மாட்டுச்செய்வதியாதுகொல்லோவென்றவாறு.

வி. ஆற்றுதல்பலருமறியப்பரப்புதல் - அதனிற்கொடியதுபிறிதொன்றுகாணாமையினென்னைகொலென்றார்-செய்வதென்பதுசொல்லெச்சம்-என்னைகொலென்றுபாடமோதினவியல்பினரானவரென்றுரைப்பாருமுளர்.

பு. (துன்-டு) எ-இ-ள். துன்னியார்குற்றமும்-(தம்மொடு மிகுதியுங்) கலந்தவருடையகுற்றத்தையும், தூற்றுமரபினூர்-(அவர்புறத்திலேயெல்லாருமறியப்) பரப்பிவைக்குந்தன்மையையுடையவர், ஏதிலார்மாட்டென்னைகொல்-(தம்மொடு கலவாத) அயலாரிடத்தில்யாதுதான்செய்யார், எ-று.

வி. தூற்றுதல், யாவருமறியப்பழியைவிரித்துச்சொல்லுதல் கொடுமைகள்பலவற்றுள்ளும்-இவர் அயலாரிடத்திற்செய்யத்தகாதது இது என்றுநினைக்கப்படுவது ஒன்றுங்காணாதிருத்தலே, என்னைகொலென்றார். செய்யார்-என்பது, சொல்லெச்சம். இனி என்னைகொலென்பதை, என்னர்கொலென்று பாடஞ்சொல்லி, எந்தக்குணத்தையுடையவராவரென்றுபொருள்கூறுவாருமுண்டு.

௱அ௯. அறனோக்கியாற்றுங்கொல்வையம்புறனோக்கிப்
புன்சொலுரைப்பான்பொறை.

ப. எ-து-பிறர்நீங்கினவளவுபார்த்தவர்பழித்துரையையுரைப்பானது உடற்பாரத்தைநிலமிகக்கொடியதுபொறுத்ததேயெனக்கறமாவதென்றுகருதிப்பொறுக்கின்றதுபோலுமென்றவாறு.

வி. எல்லாவற்றையும்பொறுத்தலியல்பாயினும்இதுபொறுத்தற்கரிதென்னுங்கருத்தாலறனோக்கியாற்றுங்கொலென்றார்-இவையைந்துபாட்டானும் புறங்கூறுவார்க்கெய்துங்குற்றங்கூறப்பட்டது.

பு. (அற-றை) எ-இ-ள். புறனோக்கி-பிறர்நீங்கின இடம் பார்த்து, புன்சொலுரைப்பான்-(அவர்குற்றங்களைக்காட்டுகின்ற)ஈனவார்த்தைகளைச்சொல்லுபவனுடைய, பொறை-(உடலின்) பாரத்தை, வையம்-பூமியானது, அறனோக்கியாற்றுங்கொல்-(இப்படிப்பட்டகொடியதைச்சுமக்கிறதேயெனக்குத்) தருமமென்றுநினைத்துத்தாஞ்சுமக்கின்றது, எ-று.

வி. பூமியெல்லாவற்றையுஞ்சுமப்பது சுபாவமானாலும், இதுசுமப்பதற்கு அரிதென்னுங்கருத்தினாலே, அறனோக்கியாற்றுங்கொலென்றார். கொல் என்னும்இடைச்சொல், இங்கே சந்தேகப்பொருள்படநின்றது. கொல்லேயைய மசைநிலைக்

கூற்றே, என்னுஞ்சூத்திரநோக்கிக்காண்க. இவ்வைந்துபாட்டாலும், புறங்கூறுவார்க்குவருங்குற்றஞ்சொல்லப்பட்டது.

௱௯௰. ஏதிலார்குற்றம்போற்றங்குற்றங்காண்கிற்பிற்
றீதுண்டோமன்னுமுயிர்க்கு.

ப. எது-ஏதிலாரைப்புறங்கூறுவார் தாமவர்குற்றங்காணுமாறுபோலப் புறங்கூறலாகியதங்குற்றத்தையுங்காணவல்லராயினவர் நிலைபேறுடையவுயிர்க்குவருவதொருதுன்பமுண்டோவென்றவாறு.

வி. நடுவுநின்றொப்பக்காண்டலருமைநோக்கிக் காண்கிற்பினென்றுங் கண்டவழியொழிதலிற் பாவமின்றாகவே வரும்பிறவிகளினுந் துன்பமில்லையென்பதுநோக்கி உயிர்க்குத்தீதுண்டோவென்றுங்கூறினார்-இதனாற் புறங்கூற்றொழிதற்குபாயங்கூறப்பட்டது.

பு. (ஏதி-கு) எ-இ-ள். ஏதிலார்குற்றம்போல்-(அயலாரைப்புறங்கூறுபவர் அதற்காக) அவர்குற்றங்களைக்காண்பதுபோல், தங்குற்றங்காண்கிற்பின்-(புறங்கூறுதலாகிய) தம்முடையகுற்றத்தையுங்காண்பாரானால், மன்னுமுயிர்க்குத்தீதுண்டோ-(அவருடைய) நிலைபெறும்உயிர்க்கு (வருவதாகிய) துன்பமுண்டாமோ, (இல்லை) எ-று.

வி. நடுவுநிலைமையிலேநின்றுசமமாகக்காண்பது அருமையாதலால், காண்கிற்பினென்றும்; கண்டபோதுபுறங்கூறாராதலாலே, பாவமில்லையாம். அது இல்லையாகவேவரப்பட்டபிறவித்துன்பங்களுமில்லையென்பது நோக்கிமன்னுமுயிர்க்குத்தீதுண்டோவென்றும்; சொன்னார். காண்கிற்பின் என்னும் எதிர்காலவினையெச்சம், உண்டோ என்னுமெதிர்மறையோகாரத்தைமீர்நிலேகொண்டகுறிப்புவினைகொண்டுமுடிந்தது. அதனுள், காண், என்பதுபகுதி. பகரவொற்று. எதிர்கால இடைநிலை. இன் என்பது, வினையெச்சவிகுதி. கில் எனஇடைநின்றது, சாரியைஇடைச்சொல். இதினாலே, புறங்கூறுவதொழிதற்கு உபாயஞ்சொல்லப்பட்டது.

உ௰. அதிகாரம். chap XX

பயனிலசொல்லாமை.

ப-ம். பயனிலசொலலாமை-அஃதாவது-தமககுமபிறாககுமறமபொருளினபமாகியபயனகளுளொனறும்பயவாதசொறகளைசசொலலாமை.-பொயகுறளைகடுஞசொறபயனிலசொலலெனவாககினகணிகழுமபாவநானகனுட்பொயதுறநதாாககலலதுதநலபாககபபடாமையினஃதொழிநதிலவாழவாராறகடியபபடுமேனைமூனறனுடகடுஞசொலினியவைகூறலானுஙகுறளைபுறஙகூறாமையானுமவிலககிநினறபயனிலசொலவிதனாலவிலககுகினறாாகலினிதுபுறஙகூறாமையினபினவைககபபட்டது.

பு-ம். (பய-மை) அதாவது, தமக்கும்பிறர்க்கும் அறம் பொருள் இன்பம் ஆகியபிரயோசனங்களில் ஒன்றுங்கொடா தசொற்களைச்சொல்லாதிருப்பதைச்சொல்வது. பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல், என்று வாக்கினிடத்திலே நடக்கப்பட்டபாவம் நான்கு. அவற்றுள், பொய்துறவறத் தார்க்கல்லது தள்ளப்படாமையின் அதைநீக்கி, இல்லறத்தா ராலே தள்ளப்படும் மற்றமூன்றுக்குள், கடுஞ்சொல், இனிய வைகூறலாலும்; குறளை, புறங்கூறாமையாலும், விலக்கிநின்ற, பயனில்சொல் இதனாலே விலக்குகின்றாராதலால் இதுபுறங் கூறாமையின்பின்வைக்கப்பட்டது.

௱௯௧. பல்லார்முனியப்பயனிலசொல்லுவா
னெல்லாருமெள்ளப்படும்.

ப. எது-அறிவுடையாாபலருஙகேடடுவெறுபபபயனிலவாகியசொறகளைசசொலலுவானெலலாராலுமிகழபபடுமெனறவாறு.

வி. அறிவுடையாாபலருமவெறுபபவேயொழிநதாருமிகழபபடுதலினெலலாருமெளளபபடுமெனறா—மூனறனுருபுவிகாரததாறறொககது.

பு. (பல்-ம்) எ-இ-ள். பல்லார்முனிய-(அறிவுடையாரா கிய) பலருங் (கேட்டு) வெறுக்கும்படியாக, பயனிலசொல் லுவான்-பிரயோசனமில்லாத சொற்களைச்சொல்பவன், எல் லாருமெள்ளப்படும்-யாவராலும் நிந்திக்கப்படுவான், எ-று.

வி. பயனைஆராய்தற்கு உரியார் அவராதலால், இங்கே பல்லார் என்றது அறிவுடையார்மேலேநின்றது. அறிவுடை யார்பலரும்வெறுக்கவே, அதுநோக்கி ஒழிந்தவரும் வெறுப்

பாராதலால், எல்லாருமெள்ளப்படும் என்றார். எல்லாரும் எ ன்ற இடத்தில், எல்லாராலும்என்ற மூன்றாமவேற்றுமையுருபு (தொக்கு) குறைந்துநின்றது. அது, செய்யுள்விகாரம். செய் யுள்விகாரமென்பது, என்னவெனின், செய்யுள், என்பது-பா ட்டு. அதனுள்-அசை, சீர், தளை, அடி, தொடை, சந்தம், முதலி யவைகெடாமைப்பொருட்டுவருகின்றதென்பதுவகைவிகாரம். விகாரம்,வேறுபாடு. அந்தவேறுபாட்டை, வலித்தன்மெலித்த னீட்டல்என்னுஞ்சூத்திரத்தாலும்,ஒருமொழிமூவழி-என்னுஞ் சூத்திரத்தாலும் அறிக. அவற்றுள்-இந்தவிகாரம், சீருஞ்செப் பலோசையுங்குறித்துவந்ததொகுத்தல்விகாரம். என்னெனின் வெண்பாவிலே, நாலசைச்சீர்வருதற்கு இலக்கணமில்லை; வெ ண்பாவின வாநேரசையாலிற்ற மூவசைச்சீர் என்றதினாலே, எ ல்லாராலும் என விரித்துநின்றால்; நாலசைச்சீராய்ச்செப்ப லோசைகெட்டுநிற்குமாதலால், எல்லாரும் எனக் குறைந்துநி ன்றுதொகுத்தல்விகாரத்தைப்பெற்றுச்சீருஞ்செப்பலோசை யுங்கெடாமல் நின்றதுகாண்க. செப்பலோசை, வெண்பா ஓசை. ஓசை, ஒலியின்பண்பாகிய சந்தம்.

௱௯௨. பயனிலபல்லார்முற்சொல்லனயனில நட்டார்கட்செய்தலிற்றீது.

ப. எ-து- பயனிலவாகியசொறகளையறிவுடையாாபலாமுனனே யொருவ னசொலலுதலவிருபபமிலவாகியசெயலகளைததனனடடாாமாடடுசசெயதலி னுநதீதெனறவாறு.

வி. விருபபமிலவெறுபபன-இசசொலஅசசெயலினுமிகவிகழறபாடுப யககுமெனபதாம.

பு. (பய-ஞ.) எ-இ-ள். பயனில பிரயோசனமில்லாத (சொற்களை,)பல்லார்முற்சொல்லல்-அறிவுடையாராகிய)பலர் முன்பு (ஒருவன்) சொல்வது, நயனில-விருப்பமில்லாதவை யாகிய (செயல்களை,) நட்டார்கட்செய்தலிற்றீது-(தன்) சிநே கிதரிடத்துச்செய்வதைக்காட்டிலுந் தீமையுடையதாம், எ-று.

வி. சொல்லல் என்றதனால். பயனில-என்பது சொற்க ளென்பதும்; செய்தல்என்றதனால், நயனில-என்பது செயல் களென்பதும்; பெறபபட்டன. விருப்பமிலவாவன, வெறு

க்கத்தக்க பாவச்செய்க்கைகள் இந்தப்பயனிலாதனவற்றைச் சொல்லுதல், அந்த நயனிலாதனவற்றைச்செய்தலினும்நிந்திக்கப்படுவதையுண்டாக்கும் என்பது கருத்து.

௱௯௫. நயனிலனென்பதுசொல்லும்பயனில பாரித்துரைக்குமுரை.

ப. எது-பயனிலவாகியபொருளகளையொருவனவிரிததுரைககுமுறைதானேயிவனநீதியிலனெனபதனையுரைககுமெனறவாறு.

வி உரையாலிவனயனிலனெனபதறியலாமெனபாரதனையுரைமேலேறறியுரைசொலலுமெனறார.

பு. (நய-ரை) எ-இ-ள். பயனில - பிரயோசனமில்லாத (பொருள்களை,) பாரித்துரைக்குமுரை - (ஒருவன்) விரித்துச் சொல்லுஞ்சொல்லுத்தானே, நயனிலனென்பது சொல்லும்- (இவன்)நீதியில்லாதவனென்பதைச்சொல்லும், எ-று.

வி. அவன்சொல்லப்பட்டசொல்லினாலே, யிவன்நீதியில்லாதவனென்பதை அறியலாமென்று சொல்லவந்தவர், அதை உரையின்மேலேற்றி, யுரைசொல்லுமென்றார்.

௱௯௬. நயன்சாராநன்மையினீக்கும்பயன்சாராப் பண்பில்சொற்பல்லாரகத்து.

ப. எது-பயனெனுடபடாதபணபிலசொறகளையொருவனபலரிடைசசொலலுமாயினவையாவாமாட்டுநீதியோடுபடாவாயவனைநறகுணஙகளினீககபபடுமெனறவாறு.

வி. பணபுஇனிமையுமெயமையுமுதலாயினசொறகுணஙகள-சொலவினெனபதுமயாவாமாட்டுமெனபதுமெசசமாயவருவிககபபடடன.

பு. (நய-து) எ-இ-ள். பயன்சாரா-பிரயோசனத்தொடு கூடாத, பண்பில்சொல்-(இனிமையும் உண்மையுமுதலாகிய) குணமில்லாதசொற்களை, பல்லாரகத்து-(ஒருவன்) பலரிடத்தில் (சொல்லுவானானால்அவைதானேயெல்லாரிடத்தும்,) நயன்சாரா-நீதியொடுகூடாதவையாகி, (அவனை) நன்மையினீக்கும்-நற்குணங்களிலேநின்று நீக்கிவிடும், எ-று.

வி. சொல்லின்-என்பதும், எல்லாரிடத்தும் என்பதும், வருவித்துரைக்கப்பட்டன.

௱௯௫. சீர்மைசிறப்பொடுநீங்கும்பயனில
நீர்மையுடையார்சொலின்.

ப. எ-து - பயனிலவாகியசொற்களைப்பின்னியநீர்மையுடையார்சொல்லுவ ராயினவர்க்குவிழுப்பமுமதனாலவருக்குமதிக்கற்பாடுமுடனேநீங்குமென்ற வாறு.

வி. நீர்மைநீர்னதன்மை-சொலின்னென்பதுசொல்லாமையைவிளக்கின் றது.

பு. (சீர்-ன்)எ-இ-ள் பயனில-பிரயோசனமில்லாத(சொ ற்களை,) நீர்மையுடையார்சொலின்-நற்குணமுடையவர்சொல் லுவராயின், (அவருடைய) சீர்மை-புகழானது, சிறப்பொடுநீ ங்கும்-(யாவருமதிக்கப்பட்ட) பெருமையோடேகூட ஒதுங் கிப்போம், எ-று.

வி. சொலின் என்பது, சொல்லார் என்பதைவிளக்கிநி ன்றது. ஒடு, ஒருவினையுடனிகழ்ச்சிப்பொருள்படநின்றமூன் றும்வேற்றுமையுருபு.

௱௯௬. பயனில்சொற்பாராட்டுவானைமகனென்
மக்கட்பதடியெனல்.

ப. எ-து - பயனில்லாதசொற்களைப்பலகாலுஞ்சொல்லுவானைமகனென் றுசொல்லற்கமக்களுட்பதரென்றுசொல்லுக்வென்றவாறு.

வி. அல்விகுதிமுன்னெதிர்மறையிலும்பின்வியங்கோளிலும்வந்ததுஅ றிவென்னும்முளையிடனமையின்மக்கட்பதடியென்றார்-இவையாற்பாட்டாலும் பயனில்லாதசொற்களைச்சொல்லுதலின்குற்றங்கூறப்பட்டது.

பு. (பய-ல்) எ-இ-ள். பயனில்சொல்-பொருளில்லாத சொற்களை, பாராட்டுவானை-மேன்மேலும்புகழ்ந்துசொல்ப வனை, மகனெனல்-ஆண்மகனென்றுசொல்லாதொழிக, மக்கட் பதடியெனல்-ஆண்மக்களுள்ளேபதரென்றுசொல்லுக, எ-று.

வி. எனல், என்னும்வியங்கோண்முற்றுவினையிரண்டினு ள்ளேமுன்னையது, எதிர்மறையிலும்; பின்னையது, உடன்பாட் டிலும்வந்தது. அதுகயவொடு ரவ்வொற்றல்லாலும் மாவைகா னிற்றவியங்கோண் முற்றவையெய்து மிடம்பாலெங்குமென் ப.என்னுஞ்சூத்திரம்நோக்கிக்காண்க. உடன்பாடு,எதிர்மறை, என்பனயாவை எனின் - எந்தச்சொல்லிலேகாலத்தொடுபட்ட

வினையுடன்பட்டுநிற்குமோ, அதுஉடன்பாட்டுவினை என்றும், இந்த உடன்பாட்டுவினை இனிச்சொல்லும்வினைக்கு எதிராதலால், அதை மறுத்துநிற்கும்வினை, எதிர்மறைவினையென்றுஞ் சொல்லப்படுபவையாமெனக்காண்க. எடுத்தல், எடை. தொடுத்தல், தொடை. என்றாற்போல, மறுத்தல், மறையெனநின்றது. பாராட்டுதல், புகழ்ந்துசொல்லுதல். அது, பொய்பாராட்டலென்னும் அகப்பொருட்களவியலின் துறைநோக்கிக் காண்க. இனிஇரட்டுறமொழிதலென்னும் உத்தியினாலே, இவர் பயனில்சொல்லென்றமாத்திரமே, அரிசியில்லாதநெல் எனவும், பொருளில்லாதசொல்லெனவும், பொருந்தவைத்தாராதலால்; அரிசியில்லாதநெல்லை நெற்பதரென்பதுபோலப்பொருளில்லாத சொல்லைச்சொற்பதரெனவும்; அதைப்புகழ்ந்து சொல்பவனுள்ளே-அரிசியும், பொருளும், போன்ற அறிவில்லாமையின், மக்கட்பதரெனவும், இவையெல்லாம் உய்த்துணரவைத்தமையால் உய்த்துணர்வைப்பென்னு முத்தியும்பெறநின்றதிக்குறளெனக்காண்க. எழுவாய்ப்பயனிலை என்றவிடத்துப்பயனிலையென்றது, பொருள்நிற்கும் நிலையையாதலாற்பயன் என்பது, பொருள். அதுநெல்லைவிசேடித்துநிற்கும்போது, அரிசிப்பொருளில்லாதநெல்லெனக்கொள்க. இவையாறுபாட்டாலும், பயனில்லாத சொற்களைச்சொல்லுதலின்குற்றஞ்சொல்லப்பட்டது.

௱௯௭. நயனிலசொல்லினுஞ்சொல்லுகசான்றோர்
பயனிலசொல்லாமைநன்று.

ப. எது-நீதியொடுபடாச்சொற்களைச்சான்றோர்சொன்னாராயினுமஃது தலைமையும்பயனிலவற்றைச்சொல்லாமைபெறின் துநன்றென்றவாறு

வி. சொல்லினுமெனவேசொல்லாமைபெறப்பட்டது-நயனிலவற்றினும்பயனிலதீயவென்பதாம.

பு. (நய-று) எ-இ-ள். நயனில-இன்பமில்லாத (சொற்களை, சொல்லினுஞ்சொல்லுக-(ஒவ்வோரிடங்களிற்) சொல்லவேண்டினுஞ்சொல்லியமைக, சான்றோர்-இல்லறம்நிறைந்தவர், பயனில-பிரயோசனமில்லாத (சொற்களை,) சொல்லாமை நன்று-(எவ்விடத்தும்) சொல்லாதிருப்பதுநன்மை, எ-று.

வி. வேம்புங்கடுவும்போல்வனவெஞ்சொற்
றுங்குதலின்றிவழி நனியயக்கு மோம்படைக்கிளவி
யென்பாராதலால், இல்லறநடத்துதற்பொருட்டு ஒரோவழிப்
பிரயோசனத்தைத்தருகின்றகடுஞ்சொல்லுஞ்சொல்லவேண்டு
தலாற்சொல்லினுஞ்சொல்லுகவென்றும்; அந்த இடத்துமின்
சொல்லினாலேதானேபிரயோசனப்படுத்துவது மிகவும்நன்று
என்பதுதோன்றச்சொல்லினும், என இழிவு சிறப்புஉம்மை
கொடுத்தும்;ஒருபொழுதும்வாழ்வீதுணராமைநிச்சயமாதலா
லே, தமக்காயினும் பிறர்க்காயினும் பிரயோசனப்படாதசொ
ற்களைச்சொல்லி வீணேகாலம்போக்குதல், கூடாதாதலாலும்,
அறிவுடையோரவனைமக்கட்பதரெனப்புறம்போக்குவராதலா
லும், அவர்புறம்போக்கவே, ஈனையறிவில்லாதவரோசுற்றமாக
ச்சூழ்ந்துவினைந்துகெடுப்பராதலாலும், அச்சொற்களைச்சொ
ல்லாது நாவையடக்கி மனத்தையு மொடுக்கினவர்க்கு அந்த
அறந்தானே, யெல்லாநன்மைகளையுந்தருமாதலால், பயனில
சொல்லாமை நன்றென்றும், சொன்னார். ஓரோரிடத்து என்
பதும், எவ்விடத்தும் என்பதும், குறைந்துநின்றன. நயன்,
இன்பம். ஓம்படைக்கிளவி, பாதுகாப்புக்கு அடுத்தசொல்.
பாதுகாப்பு, இரட்சிப்பு. நயனிலவற்றிலும் பயனிலகொடிய
வையென்பது, கருத்து.

௱௯௮. அரும்பயனாயுமறிவினார்சொல்லார்
பெரும்பயனில்லாதசொல்.

ப. எ-து-அறிதற்கரியபயன்களையாராயவல்லவறிவினையுடையார்மிக்க
பயனுடையவல்லாதசொற்களைச்சொல்லாரென்றவாறு.

வி. அறிதற்கரியபயன்களாவன வீடுபேறுமேற்கதிச்செலவுமுதலாயின
பெரும்பயனில்லாதவென வேபயன்சிறிதுடையனவுமொழிக்கப்பட்டன.

பு. (அரு-ல்) எ-இ-ள். அரும்பயனாயுமறிவினார்-(அறிதற்
கு) அருமையாகியபிரயோசனங்களையாராயவல்ல அறிவுடைய
வர், பெரும்பயனில்லாதசொல்-பெரிதாகிய பிரயோசனமில்
லாதசொற்களை, சொல்லார்-சொல்லமாட்டார், எ-று.

வி. அரும்பயன்களாவன, வீடுபெறும்பேறும்மற்றமேலானபதவிகளையடைவதும்முதலானவை. பெரும்பயனில்லாதவெனவே, பயன்சிறிதுள்ளவையும் ஒழிக்கப்பட்டன.

௱௯௯. பொருடீர்ந்தபொச்சாந்துஞ்சொல்லார்மருடீர்ந்த
மாசறுகாட்சியவர்.

ப. எது-பயனினீங்கியசொற்களைமறந்துஞ்சொல்லாமயக்கத்தினீங்கியதூயவறிவுடையார்-என்றவாறு.

வி. தூயவறிவுமெய்யறிவு-மருடீர்ந்தவென்னும்பெயரெச்சங்காட்சியவரென்னுங்குறிப்புப்பெயர்கொண்டது-இவைமூன்றுபாட்டானும்பயனிலசொல்லாமையின்குணங்கூறப்பட்டது.

பு. (பொ-ர்) எ-இ-ள். பொருடீர்ந்த-பயனீங்கிய(சொற்களை,) பொச்சாந்துஞ்சொல்லார் - மறந்துஞ்சொல்லமாட்டார், மருடீர்ந்த - மயக்கம்நீங்கிய, மாசறுகாட்சியவர்-குற்றமற்ற, (பரிசுத்தமான) அறிவுடையவர், எறு.

வி. பரிசுத்த அறிவு, மெய்யறிவு. மருடீர்ந்தவென்னும் பெயரெச்சவினை, காட்சியவரென்னுங்குறிப்புவினையாலணையும்பெயர்கொண்டுமுடிந்தது. இவைமூன்றுபாட்டானும், பயனிலவாகிய சொற்களைச்சொல்லாமையின்குணஞ்சொல்லப்பட்டது.

௨௱. சொல்லுகசொல்லிற்பயனுடையசொல்லற்க
சொல்லிற்பயனிலாச்சொல்.

ப. எது-சொற்களிற்பயனுடையசொற்களைச்சொல்லுகசொற்களிற்பயனில்லாதசொற்களைச்சொல்லாதொழிகவென்றவாறு.

வி. சொல்லினென்பதிருவழியுமிகையாயினுஞ்சொற்பொருட்பின்வருநிலையென்னுமணிதோன்றவந்தது-வைகலும்வைகல்வரக்கண்டுமென்பதுபோல-இதனாற்சொல்லப்படுவனவும்படாதனவும்-நியமிக்கப்பட்டன.

பு. (சொ-ல்)எ-இ-ள். சொல்லிற்பயனுடையசொல்லுக-சொற்களிலேபிரயோசனமுடையசொற்களைச் சொல்லியமைக, சொல்லிற்பயனிலாச்சொல்சொல்லற்க - சொற்களிலேபிரயோசனமில்லாதசொற்களைச்சொல்லாதொழிக, எறு.

வி. சொல்லின் என்பது, இரண்டிடத்தும் அதிகமாயினும்சொற்பொருட்பின்வருநிலையென்னும் அலங்காரத்தைதக்குறி

த்துவந்தது. என்னவெனின், முன்வருசொல்லும்பொருளும் பலவயிற்பின்னும்வருமெனிற்பின்வருநிலையே என்னும் அணி இலக்கணச்சூத்திரநோக்கிமுன்வந்தசொல்லுத்தானேபின்பலவிடத்தும்வருவது, சொற்பின்வருநிலை அணியெனவும், முன்வந்தபொருள்தானேபின்பலவிடத்தும்வருவது, பொருட்பின்வருநிலையணியெனவும், முன்வந்தசொல்லும் பொருளும்பின்பல இடத்தும்வருவன, சொற்பொருட்பின்வருநிலை அணியெனவும், காண்க. இதிலே, சொல்லுகஎன்னும்வியங்கோள்முற்றின்பகுதிமுன்வந்தபொருள் அதுசொல்லற்கஎன்னும்எதிர்மறைவியங்கோள்முற்றிற்குமபின்வந்தது எனவும்; சொல்லின் என்பதிற்சொல் என்பது, பின்னும்வந்தசொல்லாதலால்அது, சொற்பின்வருநிலை; ஆகஇரண்டுங்கூட்டச்சொற்பொருட்பின்வருநிலையணியெனக்கொள்க. இதினாலே, சொலலப்படுபவையும்படாதவையுமாகியவிரண்டுஞ்சொலலப்பட்டன.

இனியிதற்குவேறோர்முடிபு. சொல்லின்-சொல்லவேண்டுமாயின், பயனுடைய-பிரயோசனமுடையசொற்களை, சொல்லுக-சொல்லியமைக,சொல்லின்-சொல்லுதலினாலே, (அடையப்படும்) பயனிலாச்சொல்-பிரயோசனமில்லாதசொற்களை, சொல்லற்க-சொல்லாதொழிக, எ-று.

இதற்கு-வி. சொல்லின் என்பன இரண்டினுள்முன்னையது, செயினென்னும்வாய்பாட்டுவினையெச்சமெனவும்; பின்னையது, முதனிலைத்தொழிற்பெயர் இன்னுருபேற்றதெனவும்; கொள்க.

உக. அதிகாரம்.

தீ வி னை ய ச் ச ம்.

ப-ம. தீவினையச்சம்-அஃதாவது-பாவங்களைச்செய்தற்கஞ்சுதல்-இதனுள மெய்யின்கணிகழும்பாவங்களெல்லாந்தொகுத்துவிலக்குகின்றமையாக வினிதுபயனிலசொல்லாமையின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (தீ-ம்) அதாவது, பாவங்களைச்செய்வதற்குஅஞ்சுவதைச்சொல்வது. இந்த அதிகாரத்தினாலே சரீரத்தினாலே

செய்யப்படும் பாவங்களையெல்லாந்தொகுத்துவிலக்குகின்று ராதலாலேமுன்வாக்கினாலே சொல்லப்பட்டபயனிலசொல்லாமையின்பின்வைக்கப்பட்டது.

உாக. தீவினையாரஞ்சார்விழுமியாரஞ்சுவர்
தீவினையென்னுஞ்செருக்கு.

ப. எ-து-தீவினையென்னுஞ்சொல்லப்படும்மயக்கத்தை முன்செய்த தீவினையுடையாரஞ்சார்; அஃதிலராகிய சீரியாரஞ்சுவரென்றவாறு.

வி. தீவினையென்னுஞ்செருக்கென்க காரியங்காரணமாகவுபசரிக்கப்பட்டது-மேற்றொட்டுச்செய்துவந்தமையானஞ்சாரென்றுஞ்செய்தறியாமையானஞ்சுவரென்றுங்கூறினார்,

பு. (தீ-கு) எ-இ-ள். தீவினையென்னுஞ்செருக்கு-பாவமென்றுசொல்லப்பட்ட அகங்காரத்துக்கு. தீவினையாரஞ்சார் (முன்செய்த) பாவத்தையுடையவர்பயப்படார், விழுமியாரஞ்சுவர்-(அந்தப்பாவமில்லாதவராகிய) சிறப்புடையவர்பயப்படுவார், எ-று.

வி. செருக்கு,அகங்காரம். தீவினையென்னுஞ்செருக்குஎனக்காரணத்தைக்காரியமாகஉபசரித்தார்,அகங்காரமேதீவினைக்குக்காரணமென்பதும்; அது இல்லாவிட்டால், தீவினையில்லையென்பதும்; தோன்றுதற்கு. பூருவந்தொடங்கிச்செய்துவந்திருப்பதினாலேதீவினையாரஞ்சாரென்றும், என்றுஞ்செய்தறியாததினாலேவிழுமியாரஞ்சுவரென்றும், சொன்னார்.

உாஉ. தீயவைதீயபயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும்.

ப. எ-து-தனக்கின்பம்பயத்தலைக்கருதிச்செய்யுந்தீவினைகள்பின்னஃதொழிந்துதுன்பமேபயத்தலாலத்தன்மையவாகிய தீவினைகளொருவனாற்றீயினுமஞ்சப்படும் என்றவாறு.

வி. தீயிதொருகாலத்துமட்டிதொருதேயத்துமட்டிதொருடம்பினுஞ்சென்றுசுடுந்தீவினைமறுபிறப்பினுமஞ்சப்படுவதாயிற்று.

பு. (தீ-ம்) எ-இ-ள். தீயவை-(தனக்குஇன்பந்தருவதைக்குறித்துச்செய்யப்பட்ட) தீவினைகளானவை-(பின்பு,) தீயபயத்தலால்-(அவற்றின்பயனாகிய) துன்பங்களைத்தருவதினாலே,

தீயவை-அந்தத்தீவினைகள், தீயினும்-தீயிலும் அதிகமாக, அஞ்சப்படும்-(ஒருவனாலே) பயப்படப்படும், எ-று.

வி. இந்தத்தீவினைகளைப்போலே, மற்றொருகாலத்தும் மற்றொரு இடத்தும் மற்றொருதேகத்தும்விடாது பின்தொடர்ந்துசுடுவது நெருப்பினுக்கு இல்லையாதலாலே, தீயினும் அஞ்சப்படும் என்றார். தீய-என்றது, தீவினைப்பயன்களையெனக்கொள்க.

௨௱௩. அறிவினுளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ்செய்யாவிடல்.

ப. எ-து- தமக்குறுதிநாடுமறிவுகளெல்லாவற்றுள்ளுந் தலையாயவறிவென்றுசொல்லுவர்நல்லோர் தம்மைச்செறுவார்மாட்டுந் தீவினைகளைச்செய்யாதுவிடுதலையென்றவாறு.

வி. விடுதற்குக்காரணமாகியவறிவைவிடுதலென்றுஞ்செய்யத்தகுவழியுஞ்செய்யாதொழியவே நமக்குத்துன்பம்வாராதெனவுய்த்துணர்தலின் தலையறிவினுளெல்லாந்தலையென்றுங்கூறினார்-செய்யாதுஎன்றது செய்யா எனக்கடைக்குறைந்துநின்றது-இவைமூன்றுபாட்டானுந்தீவினைக்கஞ்சவேண்டுமென்பதுகூறப்பட்டது

பு. (அ-ல்) எ-இ-ள். தீய-தீவினைகளை, செறுவார்க்கும்-(தம்மைப்) பகைப்பவரிடத்திலும், செய்யாவிடல்-செய்யாதொழிவதை, அறிவினுளெல்லாம்-(தமக்கு நன்மையாராயப்பட்ட) அறிவுகளெல்லாவற்றிலும், தலையென்ப-முதன்மையாகிய (அறிவு) என்றுசொல்லுவர் (நல்லோர்,) எ-று.

வி. செறுவாருள்ளும் எனவேண்டிய ஏழாம்வேற்றுமையுருபின்பொருளிலே, கு-என்னும் நான்காம்வேற்றுமையுருபு தடுமாறிநின்றது, உருபுமயக்கம். விடுதற்குக்காரணமாகிய அறிவை, விடல் என்றும்; செய்யத்தகுமான இடத்தும்செய்யாதுவிடவே, இனிநமக்குத்துன்பம்வாராதென்றுகடந்து அறிதலால், அதை அறிவினுளெல்லாந்தலையென்றும்; சொன்னார். தலை, ஆகுபெயர். செய்யாது என்னும், எதிர்மறைவினையெச்சம், கடைக்குறைந்துசெய்யா எனநின்றது. இவைமூன்றுபாட்டானுந்தீவினைக்கு அஞ்சவேண்டுமென்பது, சொல்லப்பட்டது.

உ௱ச. மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழி
னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு.

எ-து - ஒருவன் பிறர்க்குக் கேடுபயக்கும் வினையை மறந்தும் எண்ணா தொழிக; எண்ணுவனாயிற் றனக்குக் கேடுபயக்கும் வினையை அறக்கடவுள் எண்ணும் என்றவாறு.

வி. கேடென்பன ஆகுபெயர் - சூழ்கின்றபொழுதே தானும் உடனே சூழ்தலின் அவனிற்றான் முற்படும் என்பது பெறப்பட்டது - அறக்கடவுள் எண்ணுவதாவது அவன் கெட்டுத் தான் நீங்க நினைத்தல் - தீவினை எண்ணுதலும் ஆகாதென்பதாம்.

பு. (ம-ு) எ-இ-ள். மறந்தும்-மறந்தானாலும், பிறன்-ஒருவன், கேடு-(பிறர்க்குக்)கேடுதருந்தீவினையை, சூழற்க-எண்ணாதொழிக, சூழின்-எண்ணுவானானால், சூழ்ந்தவன்கேடு-எண்ணினவனுக்குக்கேடுதருந்தீவினையை, அறஞ்சூழும்-தருமதேவதையெண்ணும், எ-று.

வி. கேடு என்பவையிரண்டும், காரிய ஆகுபெயர். எண்ணுகின்றபொழுதேயறக்கடவுளெண்ணுதலால், அவனினுந்தான் முற்படுமென்பது பெறப்பட்டது. தருமதேவதையெண்ணுவதாவது, அவன்கெடும்படியாகத்தான்நீங்கநினைப்பது. தீவினையை எண்ணுதலும், ஆகாதென்பதாம்.

உ௱ரு. இலனென்றுதீயவைசெய்யற்கசெய்யி
னிலனாகுமற்றும்பெயர்த்து.

ப. எ-து - யான் வறியன் என்று கருதி அது தீர்தற்பொருட்டுப் பிறர்க்குக் கேடுடைய ஒருவன் செய்யாதொழிக; செய்வனாயின் பெயர்த்தும் வறியனாம் என்றவாறு.

வி. அன்விகுதி முன்றனித்தன்மையினும் பின்படர்க்கையொருமையினும் வந்தது - தனித்தன்மை - உளனென்னாது உண்டென்பதனுண் மறிக - இலனென்று பாடமோதுவாரும் உளர் - அத்தீவினையாற் பிறவிதோறும் இலனாம் என்பதாம் - பொருளான் வறியன் எனக் கருதித் தீயவை செய்யற்க செய்யின் பொருளானேயன்றி நற்குணம் நற்செய்கைகளானும் வறியனாம் என்றுரைப்பாரும் உளர் - மற்று மசைநிலை.

பு. (இல-று) எ-இ-ள். இலனென்று-(நான்) தரித்திரனென்று (நினைந்து அதுதீரும்பொருட்டாக,) தீயவைசெய்யற்க-(பிறர்க்குக்கேடுதருந்) தீவினைகளை (ஒருவன்) செய்யா

தொழிக, செய்யின்-செய்வானாகில், இலனாகுமற்றும்பெயர்த்து-மறுபடியும் அதிகதரித்திரனுவான், எ-று.

வி. இலனென்னுங்குறிப்புவினைப்பகுபதங்களிரண்டினுள்முன்னையது, தனித்தன்மையிலும், பின்னையது, படர்க்கையொருமையிலும்,வந்தது. தனித்தன்மையிலேவந்தது,உளனென்னுமையுண்டு என்பதினுலும்; பந்தமடி தொடைபாவினங்கூறுவன்-என்பதினுலும்; அறிக. இலமென்று, பாடஞ்சொல்லுவாருமுண்டு. அந்தத்தீவினையினுலே, சனனந்தோறும் அதிகதரித்திரனுவான் என்பதாம். இனியிதற்குப்பொருளினுலே தரித்திரனென்றுநினைத்துத்தீவினைகளைச்செய்யாதொழிகசெய்யின் அப்பொருளினுலன்றியும் நற்குணம் நற்செய்கைகளாலும்தரித்திரனுவானென்றுசொல்வாரும் உண்டு. மற்றும்-என்பது-மற்றுங்கூடுமனைமடிதுயில் என்றாற்போல, மறுபடியும் என இடப்பொருள்குறித்துநின்றது. பெயர்த்து-என்பது, வேறுபட்டு என்னும்பொருள்படநின்றவினையெச்சம். அது, மறுபடியும்வேறுபட்டிலனாகும் என, ஆக்கவினைக்குறிப்புக்கொண்டுமுடிந்தது.

௨௱௬. தீப்பாலதான்பிறர்கட்செய்யற்கநோய்ப்பால
தன்னையடல்வேண்டாதான்.

ப. எ-து-துன்பஞ்செய்யுங்கூற்றவாகியபாவங்கடன்னைப்பின்வந்துவருத்துதலை வேண்டாதவன்றீமைக்கூற்றவாகியவினைகளைத்தான்பிறர்மாட்டுச்செய்யாதொழிகவென்பவாறு.

வி. செய்வினைப்பாவங்களடுதலொருதலையென்பதாம்.

பு. (தீப-ன்) எ-இ-ள். நோய்ப்பால-துன்பஞ்செய்யுங்கூறு உடையவையாகிய (பாவங்கள்,) தன்னையடல்வேண்டாதான்-தன்னைப்பின்வந்து வருத்துவதை விரும்பாதவன், தீப்பால-தீமைக்கூறுஉடையவையாகிய (வினைகளை,) தான்பிறர்கட்செயற்க-தான்பிறரிடத்திற்செய்யாதொழிக, எ-று.

வி. செய்தாற்பாவங்கள் தன்னை வருத்தப்படுத்துவது, நிச்சயமென்பதாம. இனிநோய்ப்பால, என்பதற்கு; வியாதிக்கூறுகளையுடையதுன்பங்கள், எனப்பொருள்கொள்வதேது

ணிவு. என்னெனின், சூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும்-எனவும்; சன்மாந்தரகிருதம்பாபம்வியாதிரூபேணபீடிதம்-எனவும், சான்றோ ரிலக்கியந்தோறும் வழங்கிவருதலால், எனக்காண்க.

உ௱எ. எனைப்பகையுற்றாரு முய்வர்வினைப்பகை
வீயாதுபின்சென்றடும்.

ப. எ-து-எத்துணைப் பெரியபகையுடையாரும் அதனையொருவாற்றாற் றப்புவர் அவ்வாறன்றித் தீவினையாகியபகை நீங்காது புக்குழிப்புக்குக் கொல்லும் எ-று.

வி. வீயாதுடம்பொடு நின்றவுயிருமில்லையெனப்புழிப்போல வீயாமை நீங்காமைக்கண் வந்தது.

பு. (எ-ம்) எ-இ-ள். எனைப்பகையுற்றாரும்-எவ்வளவுபெரும்பகையுடையவரும், உய்வர்-(அதையொருவிதத்தினாலே) தப்பிப்பிழைப்பார், (அப்படியல்லாமல்) வினைப்பகை-தீவினையாகியபகையானது, வீயாது-நீங்காமல், பின்சென்று-போன இடமெல்லாம்போய், அடும்-கொல்லும், எ-று.

வி. வீயாதுடம்பொடுநின்றவுயிருமில்லை என்ற இடத்தும், வீயாமை; நீங்காமைப்பொருள்பட நின்றது.

உ௱அ. தீயவைசெய்தார்கெடுதனிழறன்னை
வீயாதடியுறைந்தற்று.

ப. எ-து-பிறர்க்குத் தீவினைசெய்தார் தாங்கெடுதலைத் தன்மைத்தெனின் ஒருவனிழனெடிதாகப்போயுமவனைவிடாது வந்தடியின்கட்டங்கிய தன்மைத்தென்றவாறு.

வி. இவ்வுவமையைத் தன்காலம் வருந்துணையும் புலனாகாதிருந்து பின்றுவந்துழியுறுப்பதாய தீவினையைச்செய்தார் பின்னர்க் கெடுந்தன்மையாகியுரைப்பாருமுளர்-அஃதுரையன்றென்பதற்கு அடியுறைந்-நிழற்றனை வீந்தற்றென்னாது வீயாதடியுறைந்தற்றென்றபாடமே சரியாயிற்று-உடலவீயாதுபின்சென்றடுமென்றுமீண்டத் தீவினையுவமையானவிளக்கினார்.

பு. (தீ-று) எ-இ-ள். தீயவைசெய்தார்கெடுதல்-பிறர்க்குத்) தீவினைகளைச்செய்தவர்கெடுவது, (எந்தத்தன்மையையுடையதென்றால்) நிழறன்னைவீயாது-ஒருவன்நிழலானது (நெடிதாகப்போயும்) அவனைவிட்டுநீங்காமல், அடியுறைந்தற்று-(வந்து) பாதத்தில் அடங்கினதன்மையையுடையதாம், எ-று.

வி. அருமை, இன்மை. அருங்கேடன் என்பதனைச்-சென்றுசேர்கல்லாப்புள்ள-புள்ளிலென்றாழ்வியன் குளமென்பதில்-சென்றுசேராதபுட்களையும் அந்தப்புட்களைப்போலவேசென்றுசேராதவெய்யிலையுமுடைய குளமெனப்பொருள் கொள்வதுபோலக்கொள்க. பட்சிகளுஞ்சூரியகிரணங்களுஞ்சேராத குளமென்றவாறு. ஒடியென்னும் வினையெச்சம், செய்யான் என்னும் எதிர்மறைவினையின் பகுதியோடுமுடிந்தது. இனி-அரும்பெறற்செல்வம் என்பதுபோல, அருங்கேடன் என்பதைக், கேடருமையன், எனத்திருப்பிக்கேடில்லாதவன், எனப்பொருள்கொளினமையுந்தன்மையுமுணர்க. இதினாலே, தீவினை செய்யாதவன்கேடில்லாதவனென்பது, சொல்லப்பட்டது.

---

௨௨. அதிகாரம்.

ஒப்புரவறிதல்.

ப-ம. ஒப்புரவறிதல்-அஃதாவது உலகநடையினையறிந்துசெய்தல்-உலகநடைவேதநடைபோலவறநூல்களுட்கூறப்படுவதன்றித்தாமேயறிந்து செய்யுந்தன்மைத்தாகலின் ஒப்புரவறிதலென்றார்-மனமொழிமெய்களாற்றவிர்தற்குவனகூறினாரினிச்செய்தற்குவனவற்றுளெஞ்சிநின்றனகூறுகின்றாராகலினிது தீவினையச்சத்தின்பின்வைக்கப்பட்டது.

பு-ம். (ஒப்-தல்) அதாவது, உலகநடையையறிந்துஉபகாரஞ்செய்தலைச்சொல்வது. உலகநடை வேதநடைபோலத் தருமசாத்திரங்களிலே சொல்லப்படுவதன்றித்தாமேயறிந்து செய்யுந்தன்மையையுடையது ஆதலால், ஒப்புரவு அறிதலென்றார். மனவாக்குக்காயங்களாலே ஒழியத்தக்கவைசொல்லியினிச்செய்யத்தக்கவையுள் மிகுந்திருந்தனவற்றைச்சொல்லுகின்றாராதலாலிதுதீவினையச்சத்தின்பின்வைக்கப்பட்டது.

௨௱௰௧. கைம்மாறுவேண்டாகடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங்கொல்லோவுலகு.

ப. எது-தமக்குநீருதவுகின்றமேகங்களினிடத்துயிர்களென்னகைமாறுசெய்யாநின்றனவாதலான்மேகங்களைப்போலவார்செய்யுமொப்புரவுகளுங்கைமாறுநோக்குவனவல்லவென்றவாறு.

வி. என்ருறறுமெனறவிருபாதுமாறருவெனபதுதோனறநிறறவினை அருவிததுகைககபபடும - தவிருநதனமையவலலவெனபதுகடபபாடெனனும பெயரானேபெறபபடடது - செயவாரதுவேணடாமையைசசெயயபபடுவன மேலேறறிருர.

பு. (கை-கு) எ-இ-ள். மாரிமாட்டு-(தங்களுக்குநீரையுத வுகின்ற) மேகங்களிடத்து, என்னாற்றுங்கொல்லோவுலகு-உயி ர்களென்ன (கைமாறு உதவியைச்) செய்யும், (ஆதலால் அந்த மேகங்களுக்கு ஒப்பானவர்செய்யும்) கடப்பாடு - ஒப்புரவுக ளும், கைம்மாறுவேண்டா-கைமாறுஉதவிகளைவிரும்பாவரம், எ-று.

வி. என்னாற்றுமென்றவினு, ஒன்றுஞ்செய்யாதொழியு மென்பதுதோன்றநின்றதினுலே, அது, வருவித்துரைத்துக் கொள்க. கடப்பாடு என்னும்பெயராலே, கைமாறுகுறியாம லே செய்யுமுறைமையுடையவையென்பது, பெறப்படும். கொடைகடப்பாடுமேற்றும்என்பதுநிகண்டு. கடம்-என்பது ம், கடமை என்பதும், முறைமை. அது தொழிற்பெயராங்கா ல், கடம்படல், கடப்படல்; கடப்பாடு, எனநிற்கும். இனிமக ரவீறுஉயர்திணைப்பெயரினகரமோடுறழா நடப்பனவுளவே- என்னுஞ்சூத்திரத்தால், கடன்படல் எனவும், வரும்-இது, இக் காலத்துவேறுபொருள்குறித்துவழங்கப்பட்டது. கைமாறு, குறித்தபோது, அதைக்கடப்பாடென்பதுகூடாதாகையாலே, செய்வாரது வேண்டாமையைச்செய்யப்படுவனவர்மின்மே லேற்றிச்சொன்னுர்.

௨௱௰௨. தாளாற்றித்தந்தபொருளெல்லாந்தக்கார்க்கு
வேளாண்மைசெய்தற்பொருட்டு.

ப. எது - தகுதிபுடையாககாயினமுயறலைசசெயதிடடியபொருணமுழுதுமஒபபுரவுசெயதறபபயததாமெனறவாறு.

வி. பிறாககுதவாதாரைபபோலேதாமேயுணடறபொருடடுமவைததிழததறபொருடடேனறெனபதாயிறறு.

பு. (தா-டு) எ-இ-ள். தக்கார்க்கு-நடுவுநிலைமையுடையா ர்க்காளுல், தாளாற்றித்தந்த பொருளெல்லாம் - முயற்சியைச் செய்துதொகுத்துவைத்தபொருள்முழுவதும், வேளாண்மை

செய்தற்பொருட்டு-ஒப்புரவுசெய்தலாகிய பிரயோசனத்தை யுடையதாம், எ-று.

வி. பிறர்க்கு உதவாதவரைப்போலே, தாமே யுண்ணுதற்பொருட்டும், வைத்து இழந்துபோம்பொருட்டும்,அன்றென்பதாம் ஆயின், என்பதுகுறைந்துநின்றது.

இனி இதற்குவேறுரை, தாளாற்றித்தந்தபொருளெல்லாம்-ஒருவன்முயற்சியைச்செய்து தொகுத்தபொருண்முழுவதும், (எதற்காகவெனின்) தக்கார்க்கு-சான்றோர்க்கு, வேளாண்மைசெய்தற்பொருட்டு-உதவிசெய்தற்காக, எ-று.

இதற்கு-வி. தக்கார், முனிவர் அறிவுடையோர்முதலாயினவர். எல்லாப்பற்றுக்களையும்விட்டவராதலால், அவர்க்குஉதவிசெய்தற்பொருட்டாகவே இல்லிடத்து இருந்து ஒருவன் முயன்றுபொருளையீட்டுவதென்பதாம். வறியார்க்கொன்றீவது, அற்றாரழிபசிதீர்த்தல்,முதலாகமற்றையார்க்குச்செய்வன வெல்லாஞ்சொன்னார். ஒப்புரவறிதலாவதுதானே உலகத்திலொத்ததறிந்து உபகரித்தலாதலால், இவ்வதிகாரத்துள்ளேமுன்கைம்மாறுவேண்டாகடப்பாடு எனப்பொதுவகையாற்றொகுத்துச்சொல்லிப்பின்னிதிலேவகுத்துச்சொல்லத்தொடங்கி அறிவுடையர்முனிவர்முதலியவரிடத்தொத்ததறிந்துசெய்கவென்றார். அவரிடத்தொத்ததறிந்துசெய்தலாவது,அவர்பொறிவழிச்செல்லாதிருத்தலால், பசிநோய்முதலியவாராமலவர்றிற்குவேண்டுவனதானேசென்றறிந்துசெய்வது. உதவிசெய்தற்கிடந்தக்காரென்பதை, தான்சிறிதாயினூஉந் தக்கார்கைப்பட்டக்கால், என்பதிலேயறிக. பொருளெல்லாந்தக்கார்க்கு வேளாண்மைசெய்தற்பொருட்டெனின்,மற்றவர்க்குத்தக்கபடிபொருள்வகையாற்செய்தலுரித்தென்பது, அருத்தாபத்தியாற்பெறப்படும் இதனுள், ஒருவன் என்பதுசொல்லெச்சமாய்க்குறைந்துநின்றது.

உ௱௰௩. புத்தேளுலகத்துமீண்டும்பெறலரிதே
யொப்புரவினல்லபிற.

ப. எ-து-தேவருலகத்துமிவ்வுலகத்துமொப்புரவுபோலநல்லனபிறசெயல்களைப்பெறலரிதெனறவாறு.

வி. ஈவாருமேறபாருமினறியெலலாருமொருதனமையராதலிறபுததே ளுலகததரிதாயிறறு-யாவாககுமொபபதிதுபோறபிறிதொனறினமையினிவவுல கததரிதாயிறறு-பெறறகரிதெனறுபாடடமோதிடபெறுதறகுககாரணமரிதென றுஊரபபாருமுளா-இவைமூனறுபாடடாலுமொபபுரவினதுசிறபபுககூறபபட டது.

